ஓம
திருச்சிற்றம்பலம

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு அ	மெய்கண்டான்யாண்டு-எளஎ புரட்டாசித் திங்கள் 1930ஞு செப்டம்பர்மூ—அக்டோபர்மூ	பரல் கூ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசனது
உருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிய யற்கரி யானை யயாத்துப்போய
நரிவி ருத்தம தாகுவர் நாடரே.

இந்தத் தேவாரப்பாட்டு நாடோறும் சிவவழி பாட்டிற் றீவளர்த்து வழிபடுபவாகளைக குறிததுக கூறப்பட்டுள்ளது.

நாடர்=(நமது) நாட்டிலுள்ளவாகள;

எரிபெருக்குவர்=சிவ வேள்வித் தீவளர்க்கிற கருமத்தைத் தவறாமற் செய்வார்கள்;

அவ் வெரி=(ஆனால்) அந்தத் தீயானது;

ஈசனது உருவருக்கமதாவது=நம்மை ஆளும் சிவபிரானது வடிவத்தினுடைய இனமாயிருத்தலை,

வருக்கம் - இனம், எட்டுவடிவங்களில் தீ ஒன்றாதலால் இனம் என்றார். அது பகுதிப் பொருள் விகுதி.

உணர்கிலார்=அறிய மாட்டார்கள்

அரி அயற்கு அரியானை=திருமாலும் அயனும் அறிய முடியாத சிவபிரானை

அயர்த்துப் போய்=மனதில் நினையாமல் மறந்து (வாழ்நாளை வீணாய்க் கழித்து)

நரிவிருத்தமது ஆகுவர்=இறந்தபின் தங்கள் உடல் நரிகளுக்கு விருந்தாகும்படி செய்வார்கள்.

விருந்து என்பது விருத்து என வலித்தல் விகாரம் பெற்று அதனோடு அம்சாரியை சேர்ந்தது. அது-பகுதிப் பொருள் விகுதி.

ஊனக்கண்ணாற் பார்க்கக் கூடியதாயும், இருளை நீக்கும் ஒளியோடு கூடியதாயும், அழுக்கு இல்லாததாயிருத்தலுடன் தன்பாலிட்ட எவ்வகை அழுக்கையும் விலக்கித் தூய்மை செய்யும் தன்மை உடையதாயும், சிவத்தினது செந்நிறமும் சத்தியினது நீலநிறமும் ஒருங்கே உடையதாயும், எங்கும் நிறைந்துள்ளதாயும், ஆக்குதல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் உடையதாயும், மண்ணும் நீரும் போலொத்த தடிப்பான பொருளல்லாமலு மிருப்பதோடு வளி (=வாயு), வெளி (=ஆகாயம்) ப் பொருள்களைப் போலக் கண்ணுக்குப் புலப்படாத நுண்பொருளல்லாமலிருப்பதாயும், வேண்டுங்கால் எந்த இடத்திலாவது வளர்க்கப்படும் தன்மையையுடையதாயும் உள்ள இயற்கைப் பொருளாயிருத்தலின் தமிழ் முன்னோர்கள் தாங்கள் வணங்கும் அரு உருவப்பொருளாகிய சதா சிவக்கடவுளுக்கு அறிகுறியாக ஓமத்தீவளர்த்து வழிபாடாற்றி வந்தார்கள். சிவதீக்கைபெற்ற பார்ப்பனர்களும் அவ்வாறேகடவுளை ஓமகுண்டத்தில் தீ வளர்த்து வழிபட்டு வந்தார்கள். இவ்வாறு வளர்க்கப்படும் தீயை “வேதவேள்வி” என்றும், “எரியோம்பல்” என்றும்’ “தீத்தொழில்” என்றும், “சிவாக்கினி” என்றும், சிவபெருமானை ‘ஓமத்தலைவன்’ என்றும், ‘யாகாதிபதி’ என்றும், ‘யஞ்ஞபதி’ என்றும் தமிழ் மறைகளும் வேதாகமங்களும் கூறுகின்றன. இவ்வாறு தீயில் கடவுளை வழிபட்டு வந்தவர்கள் பிற்காலத்தில் அதன் உண்மையை மறந்து பார்ப்பனர்களும் பிறரும் தீக்கடவுளையே வணங்கி அவன் மூலமாய்ப் பிறதேவர்களுக்கு உலகநுகர் பொருள்களை விரும்பி அவி கொடுத்து வந்தார்கள். பயன் குறியாது செய்யப்பட்டு வந்த முழுமுதற் கடவுள் வணக்கமானது உலகப்பயன் குறித்துச் செய்யப்படும் தேவர்கள் வணக்கமாக அத்தீத்தொழில் (அக்கினி காரியம்) மாறியது. ஆடுகளைக் கொன்றும் பார்ப்பனர்கள் வேள்விசெய்து அதன்புலாலை உண்டுவந்தார்கள். இப்பொழுதும் செய்து வருகின்றார்கள். இவ்வாறு செய்யப்படும் தீத்தொழிலுக்கு (=அக்கினி காரியத்திற்கு) இரங்கி மனம்வருந்தித் திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தேவாரப் பாட்டை அருளிச்செய்திருக்கிறதாகத் தெரிகிறது. M. V. நெல்லையப்பபிள்ளை.

மணிவாசகரும், கண்ணப்பரும்

சகூ௰-ம் பக்கத் தொடர்ச்சி.

[தமிழ்ப்புலவர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள்]

அடிகளருளிய திருவாசகத்தின்கண் இங்கு எடுத்துக் கொண்ட 'கண்ணப்பன்' என்னும் பாட்டைத்தவிரக் கண்ணப் பரைப் பற்றிப் பிறிதொரு பாடலுங் காணப்படுகிறது. அது,

"பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடிவாய்க் கலசமூனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவாதோ ணோக்கமாடாமோ."

என்பது. ஆனால் இது முன்னையதுபோலன்றி அந்நாயனாரின் வரலாற்றினைச் சுருக்கிக் கூறுவதாக இருக்கிறது.

இங்ஙனமே சமய குரவராகிய ஏனைய மூவரும், மற்றத் திருமுறை ஆசிரியராகிய பலரும் பெரும்பாலும் நாயனார் வரலாற்றைக் குறிப்பனவாகவே பாடியிருக்கின்றனர்; அவை,

'வேயனையதோ ளுமையோர் பாகமது வாகவிடையேறி சடைமேல்
தூயமதிசூடி சுடுகாடில் நடமாடிமலை தன்னை வினவில்
வாய்கலசமாக வழிபாடுசெயும் வேடன் மலராகுநயனம்
காய்கணையினாலிடந் தீசனடிகூடு காளத்திமலையே.'

(திருஞான சம்பந்தர்)

"கானலைக் குமவன் கண்ணிடந் தப்பநீள்
வானலைக் குந்தவத்தேவு வைத்தானிடம்
தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்டுறை
தேனலைக் கும்வயற்றென் குடித்திட்டையே." (ஷை)

"கண்ணனு நான்முகன் காண்பரியார்
வெண்ணாவல் விரும்பு மயேந்திரருங்
கண்ணப்பர்க் கருள்செய்த கயிலையெங்கள்
அண்ணலாரூராதி யானைக்காவே." (ஷை)

"காப்பதோர் வில்லுமம்புங்கையுடை யிறைச்சிப்பாரம்
தோற்பெருஞ் செருப்புத்தொட்டுத் தூயவாய்க்கலசமாட்டித்

தீப்பெருங்கண்கள் செய்யகுருதி நீரொழுகத்தன்கண்
கோப்பதும்பற்றிக் கொண்டார் குறுக்கைவீரட்டனாரே."
(திருநாவுக்கரசர்)

"குவப்பெருந் தடக்கைவேடன் கொடுஞ்சிலை இறைச்சிப்பாரம்
துவர்ப்பெருஞ் செருப்புத்தொட்டுத் தூயவாய்க்கலசமாட்ட
உவப்பெருங் குருதிசோர வொருகணை யிடந்தங்கப்பத்
தவப்பெருந்தேவு செய்தார் சாய்க்காடு மேவினாரே." (ஷை)

"கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தார்
கழிப்பாலைமேய கபாலப்பனார்." (ஷை)

"காலாலக்காலனையுங் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க்கருள்செய்த காளைகண்டாய்." (ஷை)

"கணைகொள் கண்ணப்பனென்றிவர் பெற்ற
காதலின்னருளா தரித்தடைந்தேன்."
(திருநாவலூர்)

"கற்ற சூதனற்சாக்கியன் சிலந்தி கண்ணப்பன்." (ஷை

"எறிந்தசண்டியிடந்த கண்ணப்பன்." (ஷை)

"கடியார் கணம் புல்லர் கண்ணப்பர்."
(ஒன்பதாந் திருமுறை, பூந்துருத்தி நம்பிகாடநம்பி)

"கானவேடுவன்கண் பரிந்தப்ப வானநாடு மற்றவர்க்கருளியும்."
(11-ம் திருமுறை, நக்கீரர்)

"நேசத்தால், வாயினீர் கொண்டு மஞ்சனத்துமிந்திறைச்சி
யாயசீர்ப் போனகமாவாங் கமைத்துத்—தூயசீர்
கண்ணிடந்த கண்ணப்பர் தம்மைமிகக் காதலித்து
விண்ணுலக மீந்தவிறல் போற்றி." (ஷை)

"சென்று செருப்புக்காலாற் செல்லமலர் நீக்கிச்
சென்று திருமுடிவாய் நீர்வார்த்துச்—சென்றுதன்
கண்ணிடந் தன்றப்புங் கருத்தற்குக் காட்டினான்
கண்ணிடந் தன்றப்பாமைப் பார்த்து."
(ஷை பாணதேவ நாயனார்)

ஏவு செய்மேரு தடக்கை யெழிற்றில்லை யம்பலத்து
மேவு செய்மேனிப் பிரானன்றி யங்கணர் மிக்குளரே
காவு செய்காளத்திக் கண்ணுதல் வேண்டும் வரங்கொடுத்துத்
தேவு செய்வான் வாய்ப்புன லாட்டிய திறல்வேடுவனே."
(ஷை நம்பியாண்டார் நம்பி)

"கல்லெறிந்தானுந்தன் வாய்நீர் கதிர்முடிமேலுகுத்த
நல்லறிவாளனு மீளாவழிச்சென்று நண்ணினரே." (ஷ)

என்பன.

இவையன்றிப் பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தில் அவர் வரலாறு விரித்துக் கூறப்படுகிறது. இவையன்றிப் பதினோராந் திருமுறையில் 'திருக்கண்ணப்பதேவர் திருமறம்' எனப் பெயரிய இரண்டு, *நக்கீரர் தேவராலும் கல்லாடதேவராலும் இயற்றப்பட்டுள்ளன. அவற்றிலும் அவர் வரலாற்றுச் சுருக்கமே காணப்படுகிறது. எனவே, அவர் வரலாறுதன்னைக் கூறுவார்க்கு ஆண்டவன் திருவடிக்கண் அன்பை விளைவிப்பதில் வல்லதெனக் கருதியே அதனை விரும்பி அந்நெறியிற் சென்ற அறிஞர் அனைவரும் அதனைக்கூறி அக மகிழ்ந்தாரென்பது உய்த்துணரத்தக்க தொன்றாகும். இதனை

"வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார் கொலந்தோ கிறிபட்டார்—கீளாடை
அண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுண்ணின்ற
கண்ணப்ப ராவார் கதை."

என்னும் நக்கீரதேவர் நல்வாக்கும் வலியுறுத்துதல் காண்க.

இன்னும் தொண்டர் சீர்பரவுவார் அந்நாயனாரின் இரண்டாவது நாள் வேட்டையைக் கூறத்தொடங்கி, அன்பிலழுந்திக் கூறிய,

"இவ்வண்ணம் பெருமுனிவரேகினானினியிப்பால்
மைவண்ணக்கருங் குஞ்சிவனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவளைத்துக்கான் வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறமொழிவேன் தீவினையின் திறமொழிவேன்."

என்னும் செய்யுளும் அக்கருத்தை ஆதரிப்பது காண்க. கல்லாடதேவர் 'திருக்கண்ணப்பதேவர் திருமற'த்திறுதியில்,

---

*இவர் சங்ககாலத்தவரென்றும், அல்லரென்றும் வேறுபட்டகருத்துக்களுண்டு; அவரவர் கூறும் ஆதாவுகளைத் தமிழ்ப்புலமை சான்ற திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தங்கூர்த்தமதியாற் பன்னாளாய்ந்ததின் பயனாக வெளிவந்திருக்கும் 'நக்கீரர்' என்னும் நூலிற் பரக்கக் காண்க.

"திருவேட்டுவர் தந்திருவடிகைதொழக், கருவேட்டுழல்வினைக் காரியங்கெடுமே" எனக் கூறியதூஉம் இங்குக் கருதத்தக்கதாகும். "தித்திக்குந் திண்ணப்பனுஞ் சிறுபேர்" என நக்கீரர் [illegible]ன்றது அவர் அந்நாயனாரின் பிள்ளைத் திருநாமமாகிய 'திண்ணனார்' என்பதில் ஈடுபட்டு எண்ணியெண்ணிச் சுவைத்துமகிழ்ந்தமையை விளக்குதல் காண்க.

இங்ஙனம் பன்னிரண்டு திருமுறைகளில் பத்தாவது நீங்க, ஏனையவற்றிலும் பிறநூல்களிலும் கண்ணப்பர் புகழ் மலிந்து கிடத்தல், திருத்தொண்டத் தொகையில் வரும்.

'கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பன்' என்பதற்குக் 'கலைகளனைத்திலும் மலிந்துகிடக்கும் புகழினையுடைய கண்ணப்பர்' எனக் கொள்ளும் பிறிதொரு பொருளுக்கு ஆதரவாதல்காண்க·

(தொடரும்).

சைவ சமயம்

[இது யாழ்ப்பாணம் நல்லூர். ஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களால் பிரபவளு மாசிமீ ௧௳ சென்னையில் திருத்தொண்டை நாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபையினது இரண்டாங் கூட்டத்தில் தலைமையுரையாக நிகழ்த்தப் பெற்றது·]

"இறைவனாற் பயன்"

தமக்கினிமை வஞ்சகரே தாந்தமுதற் சாரார்
தமக்கினியார் தம்முதற் சார்ந்தார்.

" இத்திருக்குறள் தமக்குத் தாம் வஞ்சகராவார் இவரென்பதும் இனியராவார் இவர்" என்பதும் உணர்த்துகின்றது. (இதன் பொருள்) தமக்கு இனிமை தாம் வஞ்சகர் தம்முதற் சாராரே—தங்களுக்கு இனிமையாயுள்ளதிலே தாங்களே வஞ்சகர்களாயுள்ளவர்கள் தங்கள் நாயகரை அடையாதவர்களே;—[illegible]கு இனியார் தம்முதற் சார்ந்தாரே—தங்களுக்கு இனியர் [illegible]ள்ளவர்கள் தங்கள் நாயகரை அடைந்தவர்களே. எ—று

தாமென்றது பசுக்களாகிய ஆன்மாக்களை, தம்முதலென்றது பசுபதியாகிய சிவபெருமானை. இனிமை இன்பம்.

துன்பத்தின் வெறுப்பும் இன்பத்தில் விருப்பும், ஆன்மாக்களுக்கு இயற்கையேயாயினும், அவர்கள் இன்பம் இது துன்பம் இது துன்பத்தினின்று நீங்கி இன்பம் பெறு நெறி இது என உள்ளபடி அறிதற்கும் துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதற்கும் சுதந்திர சக்தியுள்ளவர்களல்லர். சுதந்திரர் சிவபெருமானொருவரே. ஆன்மாக்களோ பரதந்திரர்கள். ஆன்மாக்கள் இவ்வுண்மையையறிந்து சிவபெருமானது திருவருள் வழிபட்டொழுகினன்றி இன்பதுன்பங்களை அறிதலும் துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதலும் இயலாவாம். நித்தியமாகிய பேரின்பம் முத்தி யின்பமொன்றே, மற்றையின்பங்களெல்லாம் முட்பூவிற்றேன்போல்வனமாம்.

சிவபெருமானை அடைதலாவது அவரை விதிப்படி சிரத்தையோடு வழிபடுதல். அவ்வழிபாட்டுக்கு மிகமேலாகிய கருவி சிவஞானம். இவ்வழிபாடே முத்திக்கு வாயில். சிவஞானம் ஏழுபகுதிகளையுடையது. அவையாவன அத்துவசுத்தியாகிய நிருவாண தீக்ஷை பெற்றுக்கொண்டு சிவஞானநூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களை ஓதல், ஓதுவித்தல், அவற்றின் பொருளைக் கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல், சிந்தித்ததைப் பின்பு தெளிதல், தெளிந்தபடியே அதன்பின் நிட்டைகூடல் என்பனவாம்.

இச்சிவஞானத்துக்கு ஏதுக்கள் சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை கிரியை யோகங்களாகிய பதி புண்ணியங்களாம். பதிபுண்ணியமெனினும் சிவபுண்ணியமெனினு மொக்கும். ஸ்மிருதியில் விதிக்கப்பட்ட யாக முதலியவை பசுபுண்ணியங்களாம். ஞானம் யோகமின்றியும், யோகம் கிரியையின்றியும், கிரியை சரியையின்றியும் சித்தியாவாம், அது "விரும்புஞ் சரியை முதன் மெய்ஞ்ஞானநான்கு—மரும்பு மலர் காய்கனிபோலன்றோ பராபரமே" என்னுந் தாயுமான சுவாமி பாடலாலறிக.

சரியை சிவசாலோக்கியத்தையும், கிரியை சிவசாமீப்

பியத்தையும் யோகம் சிவசாரூப்பியத்தையும், ஞானம் சிவ சாயுச்சியத்தையுங் கொடுக்கும். யாகமுதலிய பசு புண்ணியங் களோ சுவர்க்கத்தைக் கொடுக்கும். இவைகளெல்லாவற்றை யும் அறிதலும் அநுட்டித்தலும் கல்வி கேள்விகளாலன்றிக் கூடாமையால், வித்தியாசாலைகளைத் தாபித்தலும் சைவப்பிர சாரஞ் செய்வித்தலுமே முக்கியதருமங்களாம். இவைகளிறுற் றுனே மேற்கூறிய சிவதருமங்களும் சிவஞானமும் அபிவிருத்தி யாகும். இவைகளை விருத்திசெய்தலின் மிக்க புண்ணியமும், விருத்தி செய்யாமையின் மிக்கபாவமும் இல்லை இல்லை. இதற்கு பிரமாணம்:—

சிவதத்துவ விவேக விருத்தியில் உத்தரிக்கப்பட்ட
சுலோகத்தின் மொழிபெயர்ப்பு.

நிகரறுநற் சிவதரும சிவஞா னத்தை
நிறுத்திடுவோ னிலுமுயர்ந்தோ னிலத்தி னில்லை
பகர்பரம சிவயோகி யவனே யாகும்
பரிவினிறுத் திடுமாற்றல் படைத்து முய்தி
யகலுமய லானிறுத்தா தொழிந்தோன் யோகி
யாயினுமீ சுரப்பிரிய னல்ல னன்றுன்
புகருறுதீ நரகினிடை வீழ்ந்து புன்கண்
பொருந்திடுவ னெனமறைகள் புகலு மன்றே.

ஆதலினுல், இப்பதி புண்ணியங்களை அபிவிருத்தி செய்தற் பொருட்டு இங்குள்ள சைவசமயப் பிரபுக்கள் "திருத்தொண் டை நாட்டுப்பதி புண்ணிய பரிபாலனசபை" எனப்பெயர் கொண்ட ஒரு சபாசந் தாபித்தார்கள். சைவ சாத்திரங்களைக் கற்பித்தலும் சைவப் பிரசாரஞ் செய்வித்தலுமே எல்லாச் சிவ புண்ணியங்களையும் சிவஞானத்தையும் வளர்க்குங் கருவிகளாய்ச் சிறந்துள்ள உத்த மோத்தம சிவபுண்ணியங்களா மாயினும், அவைகள் பரமதருமமென்பது கல்வியறிவுடையவராகிய சில் ருக்கு மாத்திரமன்றி மற்றவர்களுக்கு விளங்காமைபற்றி அவை களுக்குப் பொருளுபகரிக்க உடன்படுவோர் தற்காலத்தில் அரிய ராதலாலும், சிவாலயத் திருப்பணிகள் பரமதருமமென்பது கல்வி யறிவுடையவரும் கல்வியறிவில்லாதவருமாகிய எல்லாருக் கும் விளங்குதல் பற்றி அவைகளுக்குப் பொருளுபகரிக்க உடன்

படுவோர் பலராதலாலும், சைவ சாத்திர படனத்துக்கும் சைவப் பிரசாரத்துக்கும் முக்கிய ஸ்தானங்கள் சிவாலயங்களா மாதலாலும, சிவாலயங்களுள்ளே பல சிலமாயிருத்தலாலும், அவைகளைத் தற்காலத்திலே ஜீர்ணோத்தாரஞ் செய்யாவிடின் விளையுங்கேடு பெரிதாதலாலும், இச்சபையார் முன்னே சிவாலயத் திருப்பணிகளை நடத்துங் கருத்துடையர்களாயினார்கள்.

சிவாலயத் திருப்பணிகளுக்குப் பொருள கொடுப்பவர்களும் அப்பொருளைவாங்கிச சிவாலயத் திருப்பணிகளைச்செய்பவர்களும் முத்தியை அடைவார்கள். இதற்குப பிரமாணம்:—

சைவசமயநெறி

திருப்பணி செய்வார்க்குஞ் சிவனையுன்னிச் செம்பொன்
விருப்புடனீவார் பெறுக வீடு.
உய்வா ருதவுநிதி வாங்கித் திருப்பணியைச்
செய்வார் பெறுக சிவம்.

சிவபத்தர்கள் தங்களிடத்துள்ள திரவியத்தை மூன்று பாகம் பண்ணி ஒருபாகத்தைத தங்கள் சீவனத்தின் பொருட்டு வைத்துக்கொண்டு மற்றை யிரண்டு பாகங்களையும் சிவ புண்ணியங்களுக்குக் கொடுத்தல்வேண்டும் என்று சிவாகமங்கள் சொல்கின்றன. இப்படிச் செய்தல அரிதாயினும், சைவசமயிகளாகிய நம்மவர்களெல்லாரும் உலோபஞ் செய்யாது, இச்சபையார் எடுத்துக்கொண்ட சிவ புண்ணியத்தின் பொருட்டுத் தங்கள் தங்களால் இயன்றபடி சிறிது சிறிதாயினும் திரவியம் உபகரிக்கக்கடவர்கள். இப்படிச் செய்யின் "ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை" என்றபடியே நம்மவர்களால் உபகரிக்கப்படும் பொருள் மிகப் பெருகி வளர்ந்து, சபையார் உத்தேசித்த சிவ புண்ணியங்களெல்லாம் இனிது நிறைவேறுவதற்குக் காரணமாகும்.

கனம் பொருந்திய பிரபுக்களே, இத்தேசத்தவர் இவ்வூரவர் இவ்வியல்புடையார் என்று உங்களாலே நன்றாக அறியப்படாதவர்களும் தருமத்தை நடத்துவதற்கு அறிவும் ஆற்றலும் இல்லாதவர்களும் தருமத் திரவியத்தின் வரவு செலவு கணக்கை உலகத்தார் அறியும்வண்ணம் வெளிபபடுத்துதற்கு உடன்படா

தவர்களுமாய் உள்ளவர்கள் உங்களிடத்திலே தனித்தனி வந்து தருமத்தின் பொருட்டு யாசிக்கும்பொழுது, நீங்கள் பெரும்பான்மையும் தடைபேசாது உங்கள் உங்களால் இயன்ற மட்டும் திரவியம் உபகரிக்கின்றீர்களே. அத்திரவியத்தைப் பெறுவோர்களுள்ளே தாங்கள் சுட்டிய தருமத்தைத்தொடங்கு வோர் சிலர். அவர்களுள்ளும் பெற்ற திரவியமுழுதையும் அத் தருமத்தில் உபயோகப்படுத்துவோர் மிகச்சிலர். திரவியம் பெரும்பொழுது முழுதையுந் தருமத்தில் உபயோகப்படுத்துங் கருத்துடையவருக்கும் அக்கருத்து அத்தருமம் முடிவுபெறும் வரையில் நிலைபெறுதல் அரிது. ஒருபோது நிலைபெறினும், அவர் காலத்திலே அத்தருமம் நிறைவேறுவிடத்து, அவருக்குப் பின் அத்திரவியம் அத்தருமத்திலே சேர்வது மிக அரிது அரிது. பெற்ற திரவியத்தைக்கொண்டு தருமத்தை முடிப்பவருள்ளும் சிலர் தாம் கல்வியறிவில்லாதவராதலாலும், கல்வியறிவுடையவ ரோடு சிறிதும் பரிசயமில்லாதவராதலாலும், எடுத்த தருமத்தை விதிப்படி நடத்தாதொழிகின்றனர். இங்ஙனமாதலின், நீங்கள் வருந்திச் சம்பாதித்த திரவியம் தருமத்தின் பொருட்டுக் கொடுக் கப்பட்ட விடத்தும், தருமத்தில் உபயோகப்படுவது சிறு பான்மை. இதற்குக் காரணம் நம்மவர்களுள் ஒரு தருமத்தை ஒருவரே தனித்து நடத்துதலாம்.

தருமங்களையும் அவைகளின் பலங்களையும் அவைகளைச் செய்யும் முறைமைகளையும் அறியவும் அறிவிக்கவும் வல்லவர் கல்வியுடையவராதலாலும், அவைகளைத் திரவியமுபகரித்து முடிக்க வல்லவர் செல்வமுடையவராதலாலும், இவ்விருதிறத்தா ருள்ளும் பலர்சபையாகத்திரண்டு விதானங்கள்செய்துகொண்டு அவ்விதானங்களின்படியே தருமங்களை நடத்தப் புகுவார்களா யின் அத்தருமங்களெல்லாம் விதிப்படி நிறைவேறும். அவற்றின் பொருட்டுக் கொடுக்கும் பொருண்முழுதும் தருமத்திற்றானே உபயோகப்படும். ஆதலினால், நம்மவர்களுள்ளே தருமஞ்செய்யக் கருத்துடையவர்கள் யாவரும் இச்சபையிற் சேருதலே உத்த மோத்தமம்.

யாவராயினும் ஒரு தருமத்தின் பொருட்டுத் திரவியம்

உபகரிக்கச் சங்கற்பித்தாராயின், சங்கற்பித்த அக்கணமே அத்திர வியம் தருமத் திரவியமேயாய்விடும். ஆகவே, அத்திரவியத்தைப் பின்பு கொடாதொழிந்தவர் தருமத் திரவியத்தை அபகரித்த அதிபாதகராகி எரிவாய் நரகத்தில் விழுந்து வருந்துவர். இஃது உண்மைநூற்றுணிவு. ஆதலினால் நீங்கள் தருமத்தின் பொருட்டுச் சங்கற்பித்த பொருளைச் சிறியதாயினும் தடையின்றி அச்சத் தோடும் அன்போடுங் கொடுத்துவிடல் வேண்டும்.

புண்ணியத்தையேனும் பாவத்தையேனும் செய்தல் செய் வித்தல் உடன்படல் என்னும் மூன்றும் தம்முளொக்குமாதலால், நீங்கள் இத்தருமத்துக்கு உபகரித்தன் மாத்திரமன்றி, உங்கள் உங்கள் பெந்துக்கள் இஷ்டர்கள் முதலாயினோருக்கும் சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் நல்லறிவுச் சுடர் கொளுத்தி, அவர் களையும் இயன்றமட்டும் இத்தருமத்துக்கு உபகாரர்களாக்க முயலல்வேண்டும்.

தெய்வப்புலமை பொருந்திய ஔவையாராலே "சான்றோ ருடைத்து" என்று புகழப்பட்ட இத்திருத்தொண்டை நாட் டின் கண்ணதாகிய இச்சென்னபட்டணம் இராஜதானியாயும் கல்வி செல்வம் அதிகாரம் முதலியவற்றினாலே, பிரசித்திபெற்ற தானமாயும் விளங்குதலினால், இப்பட்டணத்திலே ஸ்தாபிக்கப் பட்ட இச்சபையார் எக்காலமும் ஐக்கமும், தருமத்திலே சிரத் தையும், இடையறா முயற்சியும் உடையவர்களாகி எடுத்தகருமங் களை விதிப்படி நிறைவேற்றிக்கொண்டு வருவார்களாயின், மற்றை நாட்டார்களும் தங்கள் தங்கள் நாடுகளில் இப்படியே சபை ஸ்தாபித்துச் சிவ புண்ணியங்களைப் பரிபாலனஞ்செய்து வருவார்கள்; அப்பொழுது, அவைகளுக்கெல்லாம் இச்சபை யார்களே மூலகாரணர்களாதலால், அப்புண்ணிய பலங்களினும் இச்சபையார் பாகம் பெறுவார்களென்பதற்குச் சந்தேகம் உண்டோ இல்லை இல்லை.

இப்பொழுது நாம் கூறியவாறே நடத்தப்படின், சிவ புண் ணியங்களும் சிவஞானமும் அபிவிருத்தியாகும். ஆகவே, சபை யோர்களாகிய நீங்கள் உங்களுக்கும் பிறருக்கும் பயன்பட்டு உங்

களுக்கு இனியர்களாகி உங்களுக்கு உங்களினும் இனியராகிய சிவபெருமானுடைய திருவருளைப்பெற்று வாழ்ந்திருப்பீர்கள். நமக்கு நம்மினும் இனியர் சிவபெருமான் என்பதற்குப் பிரமாணம்:—

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.

என்னில் யாரு மெனக்கினி யாரிலை
யென்னி லும்மினி யாவனொ ருவனுள
னென்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே.

திருச்சிற்றம்பலம்.

காலத்தின் அருமை

[கோவை. திரு. கு. நடேசகவுண்டரவர்கள்]

உலகத்துள்ள எல்லாப் பொருள்களும் அவற்றிற்குரிய தோன்றுங்காலத்தில் தோன்றி வளருங்காலத்தில் வளர்ந்து அழியுங்காலத்தில் அழிகின்றன. மாந்தளிர் முதலியன இளவேனிற்காலத்தில் தோன்றி வளர்ந்து இலையுதிர்காலத்து உதிர்ந்து விடுதலும், முல்லைப்பூ முதலியன கார்காலத்தில் தோன்றி மாறுதற்குரிய காலத்தில் மாறிவிடுகின்றமையும் காண்குமன்றே. உரிய காலம் தவறின் ஒரு பொருள் தோன்றாமையும், காலமல்லாக் காலத்தில் தோற்றுவிக்க முயலினும் அது பெரும்பான்மையும் பயன்படாமையும் கண்கூடே. அதனாலன்றோ நம் செந்தமிழ் மூதாட்டியாராகிய ஒளவையாரும், "பருவத்தே பயிர்செய்" என்று மொழிந்தருளினார். ஆதலால் எக்காலத்தில் எதனைச் செய்யவேண்டுமோ அக்காலத்ததனைச் செய்துமுடித்தலே அறிவுடையார்க்கழகாம்.

அங்ஙனமின்றிக் காலத்தை மக்களில் ஒரு சாரார் நல்வழியில் பயன்படுத்திக் கொள்ளாமல் வீணேகழிக்கின்றனர். ஏன்? காலத்தின் அருமையையும் அது கொன்னே விரைவிற் கழிந்து போதலையும் உணராமலேயாம். விநாடி, நிமிடம், மணி, முற்

பகல், பிற்பகல், முன் இரவு, பின் இரவு, கடை இரவு, நாள், வாரம், பக்கம், திங்கள், ஆண்டு என்ற பல பெயர்களால் காலம் என்னும் பெயற்கரும்பொருள் கழிந்துகொண்டேயிருக்கிறது. எத்துணை நாள் கழிகின்றதோ அத்துணையும் நம் ஆயுளும் குறைந்துகொண்டே போகின்றதென்பதையும் நாம் உணர வேண்டாமா?

"நாளென ஒன்றுபோற்காட்டி உயிரீரும் வாளதுணர்வார்ப் பெறின்."

> **"தோற்றஞ்சால் ஞாயிறு நாழியாவைகலும்**
> **கூற்றம் அளந்து நும்நாளுண்ணும்."**

என்னும் நம் மூதாதையர்கூறிய மொழிகளை நாம் போற்றி யுணர்ந்தால் காலத்தின் அருமை புலனாகாமற்போகாது.

இத்தாலிய நாட்டுப் பெரியார் ஒருவர் தம்முடைய வாழ் நாளைத் தம் செல்வமென்று கூறுவது வழக்கமாம். அது மிகவும் பொருத்தமுள்ளதேயாம். "பொருள்தனைப் போற்றிவாழ்" என்னும் அமுதமொழியை மறந்து அதனைப் போற்றாதிருப்பின் எங்ஙனம் அது வீணே கழிந்து செல்வம் என்ற தன் பெயர்க் காரணத்தைப் புலப்படுத்திச் செல்லுமோ அதுபோலவே காலத்தை அவ்வப்போது விழிப்பாயிருந்து பயன்படுத்திக் கொள்ளாவிடின் அது வீணே கழிந்துபோம். செல்வமும் காலமும் கழிந்த பின்னரே, அவற்றை வீணாக்கியவர் அவற்றின் அருமை, பெருமைகளை உணர்வது உலக இயல்பாகவிருக்கிறது.

கல்வி கற்றற்குரிய இளமைக்காலத்தை வீணாக்கிய ஒருவன் கூறியதாக வரும், "துள்ளித் திரிகின்ற காலத்தில் என்றன் துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே," என்ற செய்யுளையும், "ஏழைத்தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம் பாழுக்கிறைத்தேன் பரம்பரனைப் பரவாதே." என்று மணிவாசகனார் அருளிய திருவாசகப் பாட்டையும் நோக்கின் இது நன்கு விளங்கும்.

சூது முதலிய தீய நெறிகளிற் பொருளைப் பெரிதும் வீண் செலவிட்டுப் பழகியவனும் மடியினால் பொழுதை வீணாக்கிப்

பழகியவனும் அதிலிருந்து மீண்டு நல்வழிப்படுதல் மிகவும் அரிதேயாம்.

இங்ஙனம் சில வகையால் காலமும் செல்வமுந் தம்முள் ஒக்குமேனும், மற்றெவற்றினும் காலம் மிகவும் அருமையுடைத்து. ஒருகால் இழந்த பொருளைப் பெருமுயற்சியானும், மறந்த கல்வியை மீளக்கற்றும், இழந்த உடல் வலிமையை மருந்தாலும் பத்தியத்தாலும், பின்னரும் பெறக்கூடும். ஆனால் இழந்த காலத்தை மீட்டும் எதனாற் பெறக்கூடும்? வானத்து மீனுக்குத் தூண்டிலிடுவதுபோல் போனதை நினைந்து நினைந்து வீணே யிரங்கவேண்டியதுதான். இரங்கிப் பயனென்ன? விதைப்புக் காலத்து உறங்கிக் கிடந்தவன் அறுப்புக்காலத்தில் அலமரலேன்.

அன்பர்களே, மக்கட்கு வகுத்த வாழ்நாளிற் செம்பாதியும் உறக்கத்தே கழிந்து போகின்றதன்றோ? குழந்தைப் பருவத்தினும், நோயினும், பசியினும், மூப்பினும் கழிகின்ற காலமெவ்வளவு! பின் நமக்குப் பயன்படவுள்ள காலமெவ்வளவு? எண்ணிப் பார்மின் மிகக்குறைவே. இக்குறைந்த காலத்தையும் மடிக்கும், குடிக்கும், சூதுக்கும் வாதுக்குமாகத் தீதிற்கழித்தால் மக்கட் பிறப்புற்ற நாம் செய்யவேண்டிய அரிய பல வினைகளை நிறைவேற்றுவதெவ்வாறு?

பலர் தாம் அரியபல செயல்களைச் செய்யவிருப்ப முள்ளவர்களெனவும், ஆனால் அவற்றைச் செய்ய நேரமில்லாமையே தடையாயிருக்கின்றதெனவுங் கூறுகின்றனர். இது சோம்பலுக்கும் சுயநலத்துக்கும் சார்பாகிய சமாதானமேயாகும். நன்மை பயக்கத்தக்கனவும் செய்து தீரவேண்டுவனவுமாகிய பலசெயல்களைச் செய்யத் தூண்டும் தம் அறிவுக்கு இத்தேறுதல் கூறித் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள்.

நன்கு உற்று நோக்கின் ஓய்வுஎனக் கழிக்கும் நேரத்தைப் பயன்படுத்துவோமாயின் பலசெயல்களை எளிதின் முடிக்கலாம். ஓய்வு என்று நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை. வேலைகளை

மாற்றி மாற்றிச் செய்வதே சிறந்த இளைப்பாறலாகும் என்று அறிஞர் பலர் அறைகின்றனர்.

உலக நன்மையின் பொருட்டு அரும்பெருஞ் செயல்களைச் செய்த அறிஞர்களை நோக்குமின். அவர்கள் பெருஞ்செல்வர்களாயிருந்து, வேண்டிய அளவு காலம் அவற்றிற்கெனப் பிரித்து வைத்துச் செய்தனரோ? இல்லை. சித்திரைமுதல் பங்குனி முடிய ஓயாது வேலைசெய்து வருபவர்களாயிருந்தும், அவ்வேலையினிடையில் வேறு சில அருஞ்செயல்களும் செய்ய வல்லவர்களாயிருந்தனர். ஒவ்வொரு செயலையும் பேரூக்கத்தோடும் காலசிக்கனத்தோடும் செய்துபழகினமையால் அவர்கள் சோம்பனொருவன் செய்வதினும் பன்மடங்கு வேலையைச் செய்ய ஆற்றல் பெற்றிருந்தனர்;

ஊக்கமுடையானொருவன் தனக்கு ஏற்பட்டுள்ள வேலைகளினும் அதிகமாகச் செய்ய விரும்புகிறான். அதனால் செய்கைத் திறத்தை நாடோறும் சிறிது சிறிதாக வளர்த்துக்கொள்ளுகிறானதலின் இயல்பில் ஒருவன் செய்யக்கூடியதினும் பலகூறுவிரைவாகவும் மிகுதியாகவும் திருத்தமாகவும் செய்யும் ஆற்றல்அடைகின்றான். சோம்பனோவெனில் செய்தின்றியமையாதவற்றையும், செய்யாது நாளை பின்னை என்று தவணைவைத்துப் பொழுது போக்குகின்றான்.

ஆசிரியர் ஒரு கட்டுரை எழுதிவரும்படி மாணவர்களுக்குக் கட்டளையிடின் ஊக்கமுள்ள மாணவன் வீடுசென்றதும் அதற்கு வேண்டியவற்றை நினைத்து உடனே விரைவில் எழுதி முடித்து மகிழ்கின்றான். மடியனோ இன்றெழுதுவோம், நாளை யெழுதுவோம் எனத் தவணைவைத்துக்கொண்டே யிருந்து, ஆசிரியர் கேட்கும்பொழுது கட்டுரை எழுதிமுடிக்காதவனாகி, "இடிபுரிந்தெள்ளுஞ் சொற்கேட்டுத் துயர்கின்றான்." நடக்கமாட்டாதவனுக்குப் புறக்கடையும் காதவழியன்றோ ?" விரைந்து நடப்பவனுக்குக் காதவழியும் புறக்கடை எல்லையேயாம்.

நல்லறன்கள் செய்ய விரும்பிய சிலரும் அதற்கு இன்றை நாளையெனத் தவணை வைத்துக்கொண்டேயிருந்து, கடைசியில்

தம் செல்வத்தை இழந்துபோவதாலோ, மூப்புமிகலாலோ, மற்றெவற்றாலோ தாம், எண்ணியவற்றை நிறைவேற்ற இயலாது வருந்தி மாள்கின்றனர். அவரைக் குறித்தே,

"இன்று நன்று நாளை நன்று என்று நின்ற இச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்.

எனவும்,

"ஒன்றே செய்க ஒன்றும், நன்றே செய்க நன்றும்,
இன்றே செய்க இன்றும், இன்னே செய்க;"

எனவும் ஆன்றோர் பணித்தனர்.

சிலர் 'இத்துணைப்பெருங் காரியம் எம்மாற் செய்ய இயல்வதோ' எனத் தடுமாற்றமெய்திச் சில நற்செயல்களை நழுவ விடுகின்றனர். செய்தன்றியமையாத அக்காரியத்தைச் செவ்வனே முடிப்பதற்குரிய வழியை நன்கு ஆராய்ந்து துணிந்து, நாடோறும் சிறிது சிறிதே செய்துவரினும் நாளடைவில் அது நன்கு முற்றுப்பெறும். "சிறுதுளி பெருவெள்ளம்," "எறும்பூரக் கற்குழியும்," என்ற என்ற பழமொழிகளுக்கேற்ப இக்கடிகை செய்த சிறிதொடு அடுத்த கடிகையிற் செய்வது சிறிதும், அப்படியே ஒவ்வொரு நாளினும், திங்களினும், ஆண்டினும் செய்வனவெல்லாம் சிறிதுசிறிதாகவே ஒன்றுசேர்ந்து ஒரு பெருஞ் செயலாய் முடியும். வானளாவிய மாடமாளிகைகளும் ஒவ்வொரு கல்லாக அடுக்கப்பட்டவைதாமே! "அருமையுடைத்தென்ற சாவாமைவேண்டும் பெருமை முயற்சிதரும்" "படியுடையார் பற்றமைந்தக்கண்ணும் மடியுடையார் மாண்பயனெய்தலரிது," அன்றோ!

நேயர்காள்,! எவ்வேலை செய்தற்பொருட்டும் எமக்கு ஒழிவில்லையே என்று குறைகூறன்மின். ஒழிவென்னும் படுகுழியிலாழ்த்தாதருளுதற்கு இறைவனை யேத்துமின். ஏன்? கடுவெயிலில் நெடுவழி நடந்தானொருவன் நீர் வேட்கையுறின் 'எப்பொழுது நீர் உண்போமோ?' என்னும் சிந்தையையே யுடையவனாய் நீர் நிலை கண்டவுடனே ஓடி அள்ளிப் பருகுவான். அதுபோலச் செய்தன்றியமையாத ஒரு நல்ல வேலை நம் உள்ளத்து ஆழ்ந்து

பதிந்து உம்மை ஊக்குமாயின், அதனைச் செய்ய ஓர் ஆண்டே னும், ஒரு திங்களேனும், ஒரு வாரமேனும், ஒரு நாளேனும் தவணைவைப்பீரோ? அந்நாளை எதிர்பார்த்துக் கையைக்கட்டிக் கொண்டு வாளாவிருப்பீரோ? மாட்டீர். அவ்வெண்ணமே உம் மை ஊக்கி எத்தனைப் பிறவேலைகளிடையும் அதனையும் விரைவிற் செய்து முடிக்கும்படி தூண்டும். ஆதலால் நீவிர் செய்யவேண் டிய கடமைகளைச் செவ்வனே உணர்ந்து அவற்றை நிறைவேற்ற ஏற்ற முறையையும் துணிமின். அவை இனிது முற்றி உயர் வடைவீர்.

> "இசையா தெனினும் இயற்றி ஓர் ஆற்றல்
> அசையாது நிற்பதன்றே"

ஆண்மையாகும்.

> "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனைய துயர்வு"

என்பதை உன்னிப் பார்மின்.

நாணயசாலையில் பொற்காசுகள் செய்யும் அறையில், தரைமேல் முழுவதும் கம்பிகள் பரப்பிவைத்து ஆண்டுச் சித ருண்டு வீழும் பொற்பொடிகள் வீணுகாமற்றிரட்டி அவற்றை யும் நாணயமாக்குகின்றனரென்று கூறப்படுகிறது. அதுபோல உமது வாழ்நாளாகிய பொற்கட்டியால் கடமைகளாகிய பணி கள் செய்யுங்கால் வீழும் துகள்களையெல்லாம் புறமே கழிய விடாது அவற்றாலும் ஓர் அரும்பணி செய்துகொண்மின்.

பலர் அவ்வொழிவு நேரமாகிய பொற்றுணுக்குகளைத்திரட் டிக் கொள்ளாது வீணே இழக்கின்றனர். காலத்தில் பற்றுள் ளம் உடையவன் நாளடைவில் பண்ணப்பணைத்த அறிவுச் செல்வனாவான்.

மேல்நாட்டு ஆசிரியர் (George Stevenson) ஒருவர் தம் முடைய காலத்தின் சிறு துணுக்கையும் ஒரு விலையுயரிய மணி யெனக்கருதி வந்தாரெனவும், ஒரு சிறு துணுக்கும் நல்ல ஒரு வேலைக்குப் பயன்பட்டபோதே மகிழ்வாரெனவும், மற்றோரறி ஞர் (Benjamin Franklin) ஒவ்வொரு நிமிடத்தையும் அறிவு

வளர்ச்சிக்குப் பயன் படுத்தினரெனவும் கூறுகின்றனர்: 'ஒயிட்' (H. G. White) என்பார் தாம் வழக்கறிஞர் வீட்டிற்குப் போய் வருகின்ற நேரத்திலேயே கிரேக்க மொழியைக் கற்றனரென்பர். நெய்துகொண்டிருக்கும் வேளைகளிலேயே இலத்தீன் இலக்கணத்தை ஒருவர் (Henry Stone) தாமே படித்துக் கற்றுக்கொண்டனராம்.

ஒரு கட்டிடத்திலுள்ள பெருங் கற்களேயன்றிச் சிறுசிறு கற்களும் அக்கட்டிடத்திற்கு உறுப்பாகவும் உறுதியாய் நிற்பதற்கின்றியமையாதனவாகவு மிருக்கின்றன. அதுபோலவே பல பெரிய வேலைகளினிடையே வாய்க்கும் சிறியசிறிய ஒழிவு நேரங்களில் ஒருவன் தேடிக்கொள்ளும் அறிவு வளர்ச்சியும், அல்லது அவன் செய்யும் நல்லசெயல்களும் அவனுக்குப் பொருள், புகழ் அறிவு முதலிய நன்மைகளைத் தந்து உறுதிபல பயக்கின்றன.

உங்களுக்கு அறிவு வளர்ச்சியிலேனும் வேறு நல்லகாரியமேதேனும் செய்ய வேண்டுமென்னும் ஆர்வமிருக்குமேல் உங்களுக்கு இயல்பாகவேயிருக்கும் வேலையினிடையே அதற்கும் சிறிது நேரமிருக்கக் காண்பீர், அல்லது நேரம் உண்டாக்கிக் கொள்ளுவீர். எப்படியும் மற்றவேலைகளோடு அதனையும் செய்து முடித்திடுவீர். அங்ஙனம் செய்யாதிருப்பீரேல் அதற்குக் காரணம் உமது ஊக்கக்குறைவேயன்றி நேரமின்மையன்று.

"நீ வாழ்நாளை விரும்புகின்றனையா? விரும்பின் காலத்தை வீணாக்காதே. காலத்தாற்றான் வாழ்நாள் ஆக்கப்பட்டிருக்கிறது." என்று அறிஞர் ஒருவர் (Franklin) மொழிவது கருதற்பாலது.

"நெடுநீர் மறவிமடி துயிலுன்கும் கெடுநீரார் காமக்கலன்" ஆகையால் அரும்பெறற் காலத்தைப் பாழ்படுத்தும் அத்தீய பண்புகளை நீவிர் பாழ்படுத்தி மடியை மடியாக ஒழுகிக் குடியைக் குடியாகச்செய்து வாழ்வீராக.

நக்கீரனார் தெய்வப்புலமை மாட்சி

(ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்)

(சஎக-ம் பக்கத் தொடர்ச்சி)

அவவாருயினும் அந்நூலில் அதனாசிரியர் **திருப்பரங்குன்றை** முதலெடுத்தோதுதலின், அவ்வாற்றானது திருப்பரங் குன்றிற் செய்யப்பட்டதென்று உய்த்துணர்ந்து கொள்ளாமோ வெனின் ;—கொள்ளாமன்றே, ஆசிரியர் நக்கீரனார் மதுரையிற் றோன்றி யதனையடுத்துள்ள பரங்குன்றின் மிக்கபற்றுடையரா கலா னதுபற்றி யதனை முதலெடுத் தோதினாராதலின் ; திருஞான சம்பந்தர் முதலான அருட்டிருவாளரும் தாந்தோன்றிய நகரைச் சிறந்தெடுத தோதுதலும் இதனோ டொருபுடை யொற்றி யுண ரப்படு மென்பது. இனி ஏட்டுச்சுவடிகளில் திருமுருகாற்றுப் படையினகீழ்க் "குன்ற மெறிந்தாய்" எனவும் "குன்ற மெறிந்ததுவும்" எனவும் இரண்டு வெண்பாக்க ளெழுதப்பட் டுள்ளன; இவ்விரண்டு வெண்பாக்களின் நடை வளத்தையும், சொல்லமைதி, பொருளமைதிகளையும் உற்று நோக்கும்வழி; அவையிரண்டு மிகப்பழையகாலத்தன வென்பதும், நக்கீரனா ரியற்றியனவேயாமென்பதுப் இனிதுவிளங்கும். அல்லதூஉம் பத்துப்பாட்டுக்க ளொவ்வொன்றின்கீழும் அவ்வப்பாட்டுக் களின் கருததுபொருளை விளக்கியும், அவ்வப்பாட்டுடைத் தலைமக்கள் பெரும்புகழ்கிளந்தும் ஒருவாற்றான் வரலாறு தெரிப் பனவாகிய ஒன்றிரண்டுமூன்று வெண்பாக்களெழுதப்பட்டி ருத்தலின் மற்றவை யவ்வவ் வாசிரியரால் தாம்தாம்பாடிய பாட் டுக்களின்கீழ் எழுதப்பட்டன வென்பது ஐயுறவின்றித் துணி ந்து கொள்ளப்படுமென்பது. இம்முறை வழுவாது அப்பத் துப்பாட்டுக்களின் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையினும், அதனாசிரியர் தாமும் அதன் வரலாறுகிளக்கும் இரண்டு செய் யுட்களெழுதினார். இனி இவ்விரண்டு செய்யுட்களும் ஆசிரி யர்தாம் ஆற்றுப்படை மொழிந்த பொழுதியற்றப்பட்டனவோ, ஆற்றுப்படையை யேனை யொன்பது பாட்டுக்களுடன் கோவை செய்து முறைப்படுத்திய போதியற்றப் பட்டனவோ வென்று

ராய்வுறுவார்க்குத் துணிதற்கருவி யின்மையின் அவையும் விளங்கா. ஆயினும், கோவைசெய்து முறைப்படுத்தியபோது ஒருதலையான் அதன்வரலாறு தெரித்தற்பொருட்டு அவையெழு தப்பட்டிருத்தல் வேண்டுமென்பது துணியப்படும். இவ்விரண் டிற் " குன்ற மெறிந்ததுவும்" எனுஞ்செய்யுளில் " இன்றெம் மைக், கைவிடா நின்றமையுங் கற்போதும்பின் மீட்டமையும்" என்று கூறப்படுதலின், நக்கீரனார் மலை முழையுட் சிறைப்பட்ட வாறும், பின் மீட்கப்பட்டவாறும் ஒருதலையான் நிகழ்ந்தன வென்பது பெறப்படும். இனி, " குன்றமெறிந்ததுவும்" என் னுஞ் செய்யுளும் "குன்ற மெறிந்தாய்" என்னுஞ் செய்யுளு மொழிய வேறு எட்டுச்செய்யுட்கள் திருமுருகாற்றுப் படைச் சுவடிகளின்கீழ் எழுதப்பட்டிருக்கின்றன. மற்றிவையும் ஆசி ரியர் நக்கீரனாரியற்றியனகொலொன்று ஆராயப்புகுந்தவழி, அச்செய்யுட்களில் 'வீரவேல்' 'தாரைவேல்' 'தீரவேல்' என்றற் றொடக்கத்து விரவியற்சொற்றொடர்களும், 'நம்புகிலேன்' எனுந் தொன்னெறிப்பட்டியலாச் சொல்லமைப்பும், 'கோலப்பா' 'வேலப்பா' முதலிய தொன்றுதொட்டு நடவாவழக்கும் பயி லக்காண்டலானும், அவை தம்முள்ளும் இறுதிக்கணின்ற இரண்டுசெய்யுட்களும் " ஆசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப், பூசையாக் கொண்டே புகல்" எனவும், " நக் கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத், தற்கோல நா டோறுஞ் சாற்றினால்-முற்கோல, மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித், தானினைத்த வெல்லாந் தரும்" எனவும் நக்கீரனா ரைப் படர்க்கைப் படுத்துரைத்துத் திருமுரு காற்றுப்படை யைச் சிறப்பித்துக் கூறுதலானும், திருஞானசம்பந்தர் முதலான அருட்டிருவாளர் தாமோதிய பதிகத்தின்கீழ்த் தம்பெயரைக் கிளந்துகூறிப் பதிகச் சிறப்பு மமைத்துக் கடைக்காப்பிடுமாறு போல, ஆசிரியர்-நக்கீரனார் தாமுந் தம்பெயரையு நூற்சிறப்பை யும் அங்ஙனம் படர்க்கைக் கண்வைத்து வேறுபடுத் தோதினா ரென்பார்க்கு " இன்றென்னைக், கைவிடா நின்றதுவுங் கற் பொதும்பிற் காத்ததுவு, மெய்விடா வீரன்கை வேல்" என்று தம்மைத் தன்மைக்கண் வைத்தோதிய ஆசிரியர் தாமே தம்மைப்

பின்படர்க்கையில் வைத்து வேறுபடுத்தா ரென்றல் பொருந்தா மையானும், அன்றியங்ஙனம் வேறுபடுத்தாரெனக் கொள்ளி னும் "ஞானசம்பந்தன் உரைசெய்த" என்பது போற்றம்மை "நக்கீரன் றனுரைத்த" என்றுவைத்துக் கூறுவதன்றி "நக் கீரர் தாமுரைத்த" என்றுயர்த்துக் கூறுதல் ஏலாமையானும், அவர் தம்மைபங்ஙனம் உயர்த்துக்கூறுரென்பது "சிறியேன் சொன்ன வறிவில்வாசகம்" எனப் பிறுண்டும் அவர் கூறு மாற் ருற் றெளியக்கிடத்தலானும் அவை பிற்காலத்தாரால் றூற்சிறப் பாக எழுதப்பட்டனவாமென்பது இனிதுவிளங்கும். அல்லதூ உம், ஆசிரியர், நக்கீரனார் கூறிய இரண்டு செய்யுட்களிலிறுதிச் செய்யுளினிறுதியிற்கிடந்த "மெய்விடா வீரன்கைவேல்" எனுஞ் சொற்றொடரிலுள்ள 'வீரவேல்' எனுமொழிகளை வேறு பிரித் தெடுத்துக்கொண்டு "வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட" என்று தொடங்குதலானும், ஏனை யொன்பது செய்யுட் களும் அங்ஙனம் அந்தாதித் தொடைப்பட நிகழாமையானும் முன்னிரண்டு செய்யுட்களும் ஆசிரியர்-நக்கீரனா ரியற்றினவா மென்பதூஉம், பின்னெட்டும் பிற்காலத் தாரியற்றியனவாமென் பதூஉம், தெற்றென வுணரப்படுமென்பது.

இனி, இங்ஙனம் ஆசிரியர்-நக்கீரனார் வரலாறு பலநூல் களில் ஒன்றோடொன்று மலைவுபட நிகழ்த்தப்படுதலின், மற்றது முழுவதூஉம் பொய்படும் போலுமென நினையற்க. ஆசிரியர் தாம் இறைவன்றந்த "கொங்குதேர் வாழ்க்கை" எனுஞ்செய் யுட்குக் குறை கூறிய தங்குறுமொழியைப் பொறுத்தருளுமாறு 'திருவெழு கூற்றிருக்கை'யிற் "சிறியேன் சொன்ன வறிவில் வாசகம், வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்" எனவும், 'பெருந்தேவபாணி' யிற் "கூடலால வாய்க் குழகனை, தறியா தருந்தமிழ் பழித்தன னடியேன்" எனவும் "எம்பெருமான் வேண்டியது வேண்டா, திகழ்ந்தேன் பிழைத்தே னடியேன்" எனவுங்கூறிக் குறையிரத்தலானும், இவை யெல்லா நிகழ்ந்த விடம் மதுரைமாநகரென்பதூஉம், இறைவன் விழித்த நுதற் கண்வெப்பம் தம்மெய்யிற்பற்றி எரிவு செய்ததென்பதூஉம், 'திருவெழு கூற்றிருக்கை' இறுதிவெண்பாவில் "ஆலவாயிலமர்ந்

தாய்—தணிந்தென்மேன், மெய்யெரிவு தீரப்பணித்தருளுவேதி யனே" எனவும், 'பெருந்தேவபாணி' இறுதி வெண்பாவில் "என் மேற், சீற்றத்தைத் தீர்த்தருளுந் தேவாதி தேவனே, யாற்றவுநீ செய்யுமருள்" எனவும் அவர்தாமே கூறுமாற்றாற் றெளியக் கிடத்தலானும், இறைவன் றமக்குக் கட்டளையிட்ட வாறு கயிலைகாணச்செல்லு நெறியின் மலைமுழையிற் றும்சிறை புகுத்தப்பட்டுப் பின் செவ்வேள் திருவருளால் அதனினின்று மீண்ட முறைமை "இன்றெம்மைக், கைவிடா நின்றதுவுங் கற் பொதும்பின் மீட்டதுவு, மெய்விடா வீரன்கைவேல்" என்றவர் 'திருமுருகாற்றுப்படை' யிறுதிவெண்பாவிற் பொதுப்பட வைத் துரைப்பதன்கட் பெறப்படுதலானும், தாங் கயிலைகாணச் சென் றமை முற்றுப்பெறாது வியத்தகு பரிசாற் காளத்தியையே யதுவாகக்காணும்படி நேர்ந்த பெற்றிநோக்கி யவ்விரண்டற்கும் ஒற்றுமைகொளுத்திக் "கயிலைபாதிகாளத்திபாதியந்தாதி" அரு ளிச்செய்ததனு லவ்வுண்மை யறியக் கிடத்தலானும் அவ்வர லாறு முழுவதூஉ மெய்ப்பட நிகழ்ந்ததாமென்பது ஐயுறவின்றி நிலையிட்டுரைக்கப்படு மெனக்கொள்க.

இனி, இறைவன் றிருவுருக்கொண்டு நக்கீரனார் விழியெதிர் தோன்றினு னெனவும், பின் அவரோடு வழக்காடி மறைந்தானெ னவுங் கூறுவனவெலாம் யாண்டும் இயற்கையின் நடவாச்செயற் கையாதலின் மற்றிவை யெல்லாம் மெய்த்திறங்கொண்டு நிகழாப் பொய்ப் பொருள்களா மென்று வேறொரு சாரார் தமக்குத் தோன்றியவாறெல்லாம் பிறழக்கூறி நலமுறார். ஆசிரியர் - நக்கீ ரனார்தாமே அங்ஙன நிகழ்ந்தவற்றையெல்லாம் இனிதெடுத்துக் கூறுதலின், அப்பெற்றியார் கூறும் அறிவில்லுரை வறிதாய்ப் போலிப்படுமென்பது நல்லுணர்வுடையா ருணர்ந்து கொள்வ ரென விடுக்க. அல்லதூஉம், மக்கட்பிறவியின் உறுதியுணர்ந்து உலக வாழ்க்கையி லமரலொழிந்து அவை மாறிமாறிவரு மியல் புணர்ந்து கழித்துத்தம்முயிர்க்கு நீங்காநிலைக்களனுயுள்ள துளக்கறும் பொருளியல்பறிந்து அப்பொருட் செயலினும் அறிவினுந் தஞ்செயலு மறிவுந்தோய்ந்து ஒருபெற்றியே யொரு பேரின்ப நுகர்ந்தமைய நினைந்திருக்கும் அறிவுடை நன்மக்கள்

பண்டைநாட் டொடங்கி யின்றளவும் நிலவப்பெற்ற இச்செந் தமிழ் நாட்டொடு, அப்பிறவியினுண்மைப் பயனறியாது தம் வாணாள் முழுவதூஉம் உலக வாழ்க்கையிலழித்து வேறோ ருறுதி நாடாது, அங்ஙனங் கழித்தலையே தமக்குப்பெரு பாகக் கொண்டொழுகும் மாக்கள் நிறையப்பெற்ற ஏனை களை ஒப்பிட்டு, அவ்வொப்புமையாலிச் செந்தமிழ் நிகழ்ந்த அரும்பேரற்புதங்களைப் பொய்யென்று நினைந் வார்க்கு நல்லறிவு கொளுத்தி யவரைச் செந்நெறிக் ஒருவாற்றானுஞ் சாலாததொன்றாமென வொழிக. பந்தர் முதலான அருட்டிருவாளருந் தாந்தா நிக களையும், இறைவன் றமக்குச்செய்யும் அருட் தத்தஞ் செய்யுட்களில் அமைத்துக் கூறி காலத்தறிவுடை நன்மக்கள் பலரு மெ மதித்தலுங் காண்க. இறைவன் தன்னடி திருவிளையாடல்களும், திருத்தொண் அவ்விறைவனருள்வழிநின்று நிகழ் செந்தமிழ் நாட்டிற்போல வேறு யான் வேற்றுநாட்டிலுள்ள கேட்டலும் பெருநகைபுரிந் இரங்குவதேயன்றி யவரை ராயினுமாக, இறைவன் ஒ ருதல், ஒருதிருத்தொண்டர் ருதல் கேட்டிழிக் கதுமெ நிகழ்ந்ததனுண்மையை ய யமையாதது மென்பது க

இனியொரு சாரார் திரும யாகக்கொண்டு தமிழ்ச் சங்க காசியிலிருந்த வடமொழிச சங்க

---

*மாக்ஸ்முலர், போப், காலஞ்செ பேரறி வாளர் பலரும் இன்னோரன்ன நன்கு மதித்தல் காண்க. 'இந்தியா நமக் வாசக மொழி பெயர்ப்பு' 'திருஞான சம்பந்

புனைந்தெடுத்துக்கட்டிய கட்டுரை யதுவாமெனவும், தமிழ்ப்
புலவர் பொய்யும்புளுகும் புனைந்து கொண்டு அரசரையிரந்து
·ிசுபெற்றுண்டு நாட்கழிக்கும் மிடிபடுவாழ்க்கைக் கையறியா
ரெனவும், அவர் கூறுமாறுபோலத் தமிழ் அத்துணைப்
சிறப்பினதும் தொன்று தொட்டது மன்றுமெனவுந்
தோன்றியவாறெல்லாம் இளிவரக்கூறிப் பெரிதுமார்த்
ுவருரை புரைபடுமுகத்தாற் றமிழின்றொன்மையும்,
து பல சொற்கள் வேறு பாடைகளில் வழங்குதலும்,
ந்த காலமும் கடைச்சங்கவரலாறும் ஈண்டெடுத்
ியவ்வாற்று ஞசிரியர்-நக்கீரஞர் காலமுங் காட்டு

ı 'இந்து மகாசமுத்திரம்' என மிகப்பிர
ாகடல் பல்லாயிர வாண்டுகளுக்கு முன்
ஆங்கிலநூல் வல்லார்க்கு இனிதுவிள
'வகைப்பட்ட தேயங்களிலுள்ள மக்
'மைமவும் ஒத்துநோக்கி யவர்தம்
·மக்களினநூலானும், இயங்கி
ளகளைப் பகுத்துக்கொண்டு
'ந்து மகாசமுத்திரததிலுள்ள
- தமிழெழுத்துக்க ளெழுதிய
ிழக்கே சந்தாத்தீவுகள் வரை
வரையினும் அகன்று கிடந்த
காலத்தெழுந்த பெருவெள்
ம், இங்ஙனமாழ்ந்துபோன
ருகும் நடுவிற்கிடந்த பெரும்
டக்கப்பட்ட மக்கள் முதன்முத
ிசையினும் பிரிந்துபோய் வேறு
ுதிலிருந்த தொல்லோர் வழங்கிய
மென்றும் பொருளினிது விளங்கச்
ங்காட்டி நிறுவி விளக்குவர் † இனி

Professor Haeckel.

வேறொருசாரார் ஆரியர்கள் முதன்முதற் காஸ்பியன்கடலை யடுத்த இடங்களிலிருந்து பின் பன்முகமாகப் பரந்து சென்றார்களென்பர்.* இனிப்பிறிதொரு சாரார் ஆரியர்கள் காஸ்பியன் கடலையடுத்த இடங்களில் முதன் முதலிருந்தார்களென்பார் மதத்தை மறுத்து, **காந்திநேவிய** தீபகற்பத்தின் தெற்கில் முதன்முதலிருந்து பின் பன்முகமாகப்பிரிந்து சென்றார்களென்பர். † அவ்வாறவர் கூறுமாற்றான் ஆரியன் முதன் முதலிருந்து பின் பிரிந்த இடமாத்திரம் பெறப்படுமாமன்றித் தமிழர்களுக்கும் உலகத்திலுள்ள எல்லா மாந்தருக்கும் அஃதேயிடமாமென்பது அதனாற் போதராமையின் யாம் முற்கிளந்துகூறிய **இலேமூரியா** என்னு நிலப்பரப்பே தமிழர்கள் தொன்றுதொட்டுவதிதற்கு இடமாயிருந்த தென்பதூஉம், அந்நிலப்பரப்பழிந்துபடவே யதனுடனழிந்தோர் இந்தியா, மலைய தீபகற்பம், சீயம், பலுசிதானம், பாரசீகம், அராபியா, துருக்கி, கிரீசு, இத்தலி முதலான பலவேறு வகைப்பட்ட தேயங்களின் தென்பாகங்களிற் சென்று குடியேறி யங்ஙனங் குடியேறிய தேயங்களின் ஒழுகலாற்றிற்கேற்ப நாடொறும் ஒழுக்கமும் உருவமும் பாடையும் வேறுபட்டு வாழ்ந்தார்களென்பதூஉம் இனிது விளங்கும். அது வன்றே,‡ கடவுள் : ஒன்று : எட்டு : கொல் : ஈன் : வேறு: சுருங்குமுதற் பலதமிழ்ச்சொற்கள் பலவேறுவகைப்பட்ட பாடைகளில் வழங்கப்படுவதூஉ மென்க. இன்னும் இதனாற் போதரும் உண்மை என்னெனின்; பண்டை நாளில் மக்கட்பரப் பென்பது இரண்டு கூறுபட்டு, ஒன்று வடக்கே **காந்திநேவிய** தீபகற்பமுதலான இடங்களில்வதிய, ஏனையது தெற்கே **இலேமூரியா** என்னும் பெருநிலப்பரப்பில் வதியப் பின் வடக்கிலுள்ள **காந்திநேவிய** முதலான இடங்கள் தட்பமிகுந்து உயிர் வாழ்வதற்கு அரிதாய் மாறினமையால் ஆண்டுறைந்த ஆரியர் தென்றிசைநோக்கிப் பன்முகமாய்ப் பரந்து போந்தும் தெற்கிலுள்ள **இலேமூரியா** என்னு நிலப்பரப்பு வெள்ளங்கொண்டழிதலின் ஆண்டிருந்தோர் வடதிசை நோக்கிப் பன்முகமாய்ச்

* Prof. Sayce. † Prof. Penka and Prof. Sayce.
‡God: One: Eight: Kill: Yean: Various: Shrink.

சென்றும் ஒருவரோடொருவர் விராய் ஒருவர்பாடையை யொரு வர்கற்று ஒருவர் ஒழுக்கத்தை யொருவர்தழீஇ ஒருவரை யொருவர் வெற்றிகண்டு ஒருவர் ஒருவரை யாண்டு இவ்வாறெல் லாம் ஒன்றுபட்டு வேறுபிரித்துக் காணப்படா நீர்மையராயினு ரென்பதாம். இங்ஙனம் இவ்விருவேறு மக்கட் பகுதிகளும் ஒருங்குகூடி ஒன்றாய்ச்சமைதலின், தாமரை : மீன் : அடவி : நீர்: தீ: காலம் : உலகம் : மணி: முத்து: மென்மை: கருமை : திண் மை: வன்மை: வெண்மை: பசுமை: கருமை: தண்மை : கவான் : ஊன் : அவை : அந்தி : சுண்ணம் : வண்ணம் : பீழை: விழி : பகு : சுடு : கட்டு: தள் : மிகு : சால் : பற முதலிய செந்தமிழ்ச் சொற்கள் வடமொழியினும், சூரியன் : சந்திரன் : அமிழ்தம் : காரணம் : எந்திரம் : சீக்கிரம் : குங்குமம் : சமுத்திரம் : கருமம்: அற்புதம் : பசு : விரோதி ; தேவர் முதலிய வடசொற்கள் செந் தமிழினும் கலந்து வழங்குவனவாயின. இனி, 'இந்து மகா சமுத்திரம்' எனப்பெயரிய மாகடல் பல்லாயிர மாண்டுகளுக்கு முன் பெருநிலப்பரப்பா யிருந்ததென்று நீவி ரோதியது பெரி தும் வியத்தக்க தொன்றுகாண், ஆயினும், அதனை ஆங்கிலநூல் வல்லார் கூறுமாறுபற்றி நீவிரும் எடுத்துக்கொண்டுரைத்தலின் மற்றது எம்மனோராற் றேறப்படுந்தகையதன்றாம், என்னை? தமிழ்நூலிலிருந்து காரண மெடுத்துக் காட்டி நிறுவாமையான் என்னு மெமக்குறுதி பயத்தற்பொருட்டுத் தமிழ் நூன் முகத் தானும் அதனைச் சிறிது விளக்கிக்காட்டுதும்.

தமிழில் மிகப்பழங்காப்பியமென அறிவுடையோர் பலரும் ஓத்தெடுத்த 'சிலப்பதிகார'த்திற் கிளக்கப்படுவனயாவும் உண் மைப் பொருள்களா மென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்பு முடிந்தது. அதில் ஆசிரியர்-இளங்கோவடிகள் *"வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடுங் கோடுங்கடல் கொள்ள" என்றார் ; இனி வேனிற்காதையில் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" என்புழி உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் "அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லை

* காடு காண்காதை.

யாகிய பஃறுளியென்னு மாற்றிற்கு மிடையே ***எழுநூற்றுக் காவதவாறும்** இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ் மதுரைநாடும் ஏழ்முன்பாலை நாடும் ஏழ் பின்பாலை நாடும் ஏழ் குன்றநாடும் ஏழ் குணகாரைநாடும் ஏழ் குறும்பனை நாடு மென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண் டொழிதலாற் குமரிப் பௌவ மென்றார்” என்று கூறினார்.

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

(திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.

பெரியான். (அ)

பெரியான் என்ற பண்டைத் தமிழ்ச்சொல் கடவுளைக் குறிக்கும் பெயர்களில் ஒன்று. இந்தச் சொல்லில் அடங்கி யுள்ள பொருள்களை இக்கட்டுரையில் கருதுவாம்.

2. பெரியான் என்னும் சொல் பெருமை என்னும் பண்புச் சொல்லடியாகப் பிறந்த பெயர்ச்சொல். பெருமை “என்னுஞ்

*** இதனால், எழுநூற்றுக்காவதம் அகன்று கிடந்த நாற்பத் தொன்பது நாடுகள் கடல் கொள்ளப்பட்டனவென்பது புலனும். இந்நாள் அளவைப்படி ஒரு காவத மென்பது பத்துமைலாக எழுநூறு காவதமும் ஏழாயிரமைலெல்லையளவாம். ‘இந்து மகாசமுத்திரம்’ இப்போது ஆங்கில நூல்வல்லார் அளந்தறிந்தவாற்றான் இருநூற் றைம்பது இலட்சஞ் சதுரமைலுடைய தென்பதியாருமறிவர். இதனலது சிறிதேறக்குறைய ஐம்பதுஇலட்சம் மைல் நீளமும ஐம்பது இலட்சம் மைல் அகலமுமுடையதென்பது பெறப்படும். பெறவே, இவ்வைம் பது இலட்சம் மைல் நீளத்தில் ஏழாயிரமைல் நிலனுயிருந்து கடல் கொள்ளப்பட்டதென்பது. இப்போதுள்ள மோரீசுதீவுக்கும் வம்பாய் நகரத்திற்கும் இடையிலுள்ள நீர்ப்பரவை இரண்டாயிரத்தைந்நூறு மைல் நீளத்தது. இனி மோரீசுதீவுககுத் தெற்கேயுள்ள கேர்கியூலன் என்னுந் தீவுக்கும் மோரீசுதீவுக்கு மிடையிலுள்ள நீளமும் அவ்வளவின தேயாம். ஆகவே நீளத்தில் இப்போதுள்ள குமரிமுனையிலிருந்து கேர்கியூலன் என்னுந் தீவுக்குத் தெற்கிலுள்ளவரையிலும் அகலத்தில் மடகாசிகர் தீவுமுதற் சுமத்திரா, சாவா முதலிய தீவுகளையுள்ளடக்கிய சந்தாதி தீவுகளளவும் நீண்டு விரிந்துகிடந்த குமரிநாடு (இலெமூரியா) கடல்கொண்டொழிந்ததென்க.**

சொல்லானது தன்னிடத்துள்ள மைவிகுதி கெட்டு, இடை உகரம் இ ஆகி, பெரிஎன நின்று; அத்துடன் ஆண்பாற் படர்க்கை விகுதி ஆன்சேர்ந்தபொழுது யகர உடம்படு மெய்தோன்றிப் பெரியான் என்று ஆகியது” பெரி என்பதனோடு அன், அர், ஆர் விகுதிகள் சேர்ந்து ; முறையே பெரியன், பெரியர், பெரியார், என வருவனவுமுண்டு. பெரியவன் பெரியவர் என வருவனவுமுள. செய்யுளில், ஆகாரம் ஓகாரமாய்த்திரிந்து பெரியோன் பெரியோர் என வருவனவுமுள.

3. இச்சொற்கள் கடவுளுக்குப் பெயர்களாய் வருவனவற்றைத் தேவாரங்களிலும் திருவாசகத்திலும் பலஇடங்களில் காணலாம். சில இங்கு காட்டப்படும். திருஞான சம்பந்தசுவாமிகள் திருக்கள்ளில் தேவாரப்பதிகம் கூ-வது பாட்டில் “கள்ளின் மேயான் **பெரியா** னென்றறிவார்கள் பேசுவாரே” என்றும, திருப்பாசுரப்பதிகம் உ-வது பாட்டில், ‘**பெரியரா** ரறிவரவர் பெற்றியே’ என்றும்; திருநாவுக்கரசு சுவாமிகள் திரு இன்னம்பர் திருத்தாண்டகப் பதிகம் ௬-வது பாட்டில், ‘தம்மிற் பிறர் **பெரியா**ரில்லை போலும்’ என்றும், திருமாற் பேறு திருத்தாண்டகப்பதிகம் எ-வது பாட்டில் ‘பிறவானைப் பிறவாத பெருமையானைப் **பெரியானை**’ என்றும்; மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்டப்பகுதி அகவலில் ‘பிரமன்மால் காணாப் **பெரியோன்** காண்க’ என்றும் கூறியிருத்தல் காண்க.

4. பெருமை என்பது, பேரருளுடைமை பேரறிவுடைமை முடிவிலாற்றலுடைமை முதலிய எட்டுப் பண்புகளாலும் நிறைந்த பெருந்தகைமையாகும். அதாவது, அன்பினாலும் அறிவினாலும் செயலினாலும் மிக்க ஆற்றலும் பண்பும் நிறைந்துள்ள தன்மை. இவ்வாற்றல்களையும் பண்புகளையும் உடையவனே பெரியவன் ஆவான். கடவுள், நிறைந்த அன்பு, அறிவு, செயல் ஆற்றல்களையும் பண்புகளையும் உடையவன்; ஆதலின் அவன் அவைகளைத் தனக்கென வழங்கச் சிறிதும் தேவையில்லாதவன். அவைகளை உயிர்களுடைய நலத்தின் பொருட்டே ஓய்வின்றி எப்பொழுதும் வழங்கும் அருட் பெருந்தன்மையுடைய

வன். அவனை ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை யாதலின் அவன் பெரியவன் என முற்காலத்தமிழ் அறிஞர்கள் கூறினார் கள்.

5. பெருமை என்னும் சொல், இக்காலத்தில் உலகவழக்கில் செருக்கு என்னும் பொருளில் வழங்கப்படுகின்றது. முற்காலத்தில் அவ்வாறு வழங்கப்படவில்லை. உள்ளச் செருக்கு (Pride) என்னும் பொருளில் பெருமிதம் என்னும் சொல் முற்காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. திருவள்ளுவ நாயனார், பெருமை என்னும் ௯-அம் அதிகாரத்தில் ௩-வது பாட்டில், "பெருமை பெருமிதமின்மை சிறுமை பெருமிதமூர்ந்து விடல்" என்று கூறியிருத்தல் காண்க. இத்தகைய பெருமையுடையவனே உயிர்களுக்கெல்லாம் தலைவனா யிருத்தற்குத் தகுதியுடையவனாதலின் பெரியானுயுள்ளவன் தலைவனும் ஆவான். முன்னை தலைவன் என்ற கடவுட்பெயர்ப் பொருளைப்பற்றி எழுதிய கருத்துக்கள் பெரியான் என்ற சொல்லுக்கும் ஒக்கும்.

6. பெரியான் என்றசொல் பண்டைக்காலந் தொடங்கி நூல்வழக்கிலும் உலகப் பேச்சுவழக்கிலும் மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. உயிர்கள் ஒன்றைச் சார்தலும் சார்ந்த வண்ண மாதலுமாகிய இயற்கைப் பண்பு உடையவைகள். மக்களுயிர்க டங்களுடைய கட்டுக் (பந்தம்) காலத்தில், உலகமாகிய பொய்யை (அசத்தை)ச் சார்ந்து அதனைப்பற்றியுள்ள பண்புகளையும், மெய் அறிவு உடையவைகளாய்க் கட்டு நீங்கிய காலத்தில், மெய்ப் பொருளாகிய கடவுளை (சத்தை)ச் சார்ந்து கடவுளுடைய பண்புகளையும் அடைவன எனச் சிவநெறி நூல்கள் கூறுகின்றன. மக்கள் மெய்யுணர்வு அடைந்த காலத்தில் கடவுளைச்சார்ந்து அவனுடைய எட்டுப் பண்புகளையும் உடையவர்களாகின்றார்கள். ஆதலின், அவர்களையும் கடவுளைப்போலப் பெரியார்கள் என்று முன்னைத்தமிழ் அறிஞர்கள் கூறினார்கள். மக்களும் எட்டுப் பண்புகளையும் உடையராவர் என்னுங் கருத்தைத், திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மைப்பற்றிக் கூறும் பொழுது "தேவாதிதேவன் சிவனென் சிந்தை சேர்ந்திருந்தநன்

தென்றிசைக் கோன்றானே வந்து கோவாடிக் குற்றேவல் செய் கென்றாலுங் குணமாகக் கொள்ளோ மெண்குணத்துளோமே”
என்று மறுமாற்றத் திருத்தாண்டகப பதிகம் க0-வது பாட்டிற் கூறியருளினர். ஆகவே, பெரியார் என்ற சொல்லானது உயிர்ப் பற்றும் பொருட்பற்றும் விட்டு, மெய் உணர்வு பெற்றுக் கடவுளுடைய அருட்டிருவடிகளை என்றும் மறவாதிருக்கும் உள்ளச் செம்மையுடைய உண்மை அடியார்களையே குறிக்கும். ஆனால் பிற்காலத்தில் அச்சொல்லானது அபபண்பு சிறிது உடைய மக்களுக்கும், கல்வி செல்வ முதலிய சிறப்பு உடைய மக்களுக்கும் வழங்கப்பட்டுவந்தது. உயர்ந்தார் என்னும் சொல்லும் ஏறக்குறையப் பெரியோர் என்ற சொலலில் அடங்கியுள்ள கருத்துக்களையே குறிக்கின்றது.

7. மேலே கூறியவாற்றால், கடவுள் தனக்குக் கீழ்ப்பட்ட எல்லா உயிர்களுடைய நலத்தை நாடிச்செய்யும் பொருட்டிற முடையனுதலின், அவன் எல்லா உயிர்களுக்கும் பெரியான் எனப்பட்டான். மக்களில் அத்துணைப் பொருளுடையவர்கள் இல்லையானாலும யாதாமொரு பிரிவுமக்கள் தாங்கள் எந்த மக்களுக்குப் பெரியார் அல்லது உயர்ந்தோர் என்று சொல்லுகிறார் களோ அவர்களுடைய நலத்தை உள்ளத்தில் நாடித்தங்கள் பொருளாலும் கல்வி அறிவாலும் இயன்றவரை உடலுழைப்பினால் செயல் செய்கிறவர்களாயிருத்தல் வேண்டும். பிறமக்கட் கூட்டத்தை இகழ்ந்து பேசுகிறவர்களும் அவர்களாற் பயன் பெறுந்தன்னல முடையவர்களும் அவர்களிடத்தில் தாங்கள் சொல்லிக்கொள்கிற உயர்ந்த தகுதியினாலுண்டாகும் கடனைச் செய்யாமல் உரிமை மாத்திரம் பாராட்டித் தங்களுக்குப பெருந்தன்மை பேசுகிறவர்களும் பெரியார் என்று கூறப்படுதற்குச் சிறிதும் பொருத்தமில்லாத அறியாமை உரையாகும். அவ்வுரையால், பெருமை கற்பனை செய்கிறவர்களுக்கும் கற்பனை செய்யப்படுகிறவர்களுக்கும் தீமையே விளையும். கற்பனை செய்கிறவர்களுக்கு உண்மைப் பெருமை என்பது யாது என்பதைப் பற்றி அறியாமை வளரும்; கற்பனை செய்யப்படுகிறவர்களுக்கு உள்ளச் செருக்கும் அறியாமையும் வளரும். பிறப்பினால் மாத்

திரம் உயர்வு உள்ளது என்று ஒழுகிவரும போலிச் சாதிக் கருத்து நமது நாட்டில் மக்களுக்கு மிக்க கேடு நெடுங்காலமாக விளைத்து வருகின்றது. அதனை, யாருக்கும் தீங்கு உண்டாகா மல் நீக்கவேண்டுமாற்றால் நீக்குதல் அறிவுடையோர் கடமை யாகும்.

கருமை

(௩௧௪-ம் பக்கத் தொடர்ச்சி)

(திருக் கபசம் எழுதியது)

இயக்கமென்பதைத் 'தொழில் நிகழ்ச்சி, புடைபெயர்ச்சி, எழுச்சி என்று பலவகையாகக் கூறலாம்' தூக்கமென்பது அசைவின்மை, வாளாகிடத்தல். தொழிலொடுக்கம் ஆகிய இவையாம். இவற்றிற்குள்ள பொருத்தத்தை ஒரெடுத்துக் காட்டால் விளக்குதும். வளர்ந்து நிற்குமொரு மரத்தைக் கருதுவோமாயின், அதிலியக்கம் நிகழ்ந்துகொண்டே யிருக்கின்றது. வேரிலிருந்து சாறு மேலேறிக் கிளை, தழை முதலியவற்றிற்குச் செல்கின்றது. இங்ஙனமொரு மரத்தில் நடக்கின்ற இயக்கமெல்லாம் எற்றிற்கு? தன்னைப்போலொரு மரத்தைத் தோற்றுவிக்கக்கூடிய விதையை ஈனும் பொருட்டாகத்தானே. விதை என்பது ஒருயிர் ஒடுங்கிக் கிடக்கும் நிலையேயன்றி வேறன்று. நுண்ணிய ஆலவிதையில், மிகச் சுருங்கிய அளவில் நீண்டு கிடக்கும் பெரிய ஆலமரத்தின் உயிர் ஒடுங்கிக் கிடக்கின்றது. இவ்வியற்கை நிகழ்ச்சியைவிடப் பெரியதொரு விந்தையுண்டுகொல்? ஆலமரத்திலியங்குகின்ற உயிர் ஆலவிதையில் தூங்குகின்றது. ஏற்ற நிலமும், வேண்டிய ஈரமுங் கண்டுழி விதையில் தூங்குகின்ற உயிர் இயங்கத்தொடங்கும். ஆதலின், இயக்கம் தூக்கத்திற் புகுகின்றது; தூக்கத்திலிருந்து இயக்கம் பிறக்கின்றது. உண்மை இங்ஙனமிருத்தலின் இயக்கங்குன்றிய நிலையைத் தூக்கமாகவும், தூக்கங்குன்றிய நிலையை இயக்கமாகவும் கொள்ளல்வேண்டும்.

இயக்கத்திற்குந் தூக்கத்திற்குமுள்ள தொடர்ச்சியை மற்றொரு முறையிற் காட்டுதும். அரசு, ஆல், பனை, வேம்பு, புளி, மா, புன்கு முதலிய மரங்களின் வளர்ச்சியை யுற்றுநோக்குவார்க்கு, தளிரெடுத்தல், பூத்தல், காய்த்தல் முதலியவை தைம் முதல் ஆனிவரையில் நடைபெறுகின்றன வென்பது இனிது புலப்படும். வேம்பு பங்குனியிற் பூப்பதால் அதன் தொழில் அல்லது இயக்கம் தை மாசியிலேயே தொடங்குகிறதென்று சொல்லுதல் தவறாகாது. வேம்பு காய்க்கும்போது புளியமரம் தளிர் ஈனுகின்றது. பொதுவாக ஆனித்திங்கள் முடியுமுன் நிலைத்திணை உயிர்களெல்லாம் பூத்துக் காய்த்து விடுகின்றன. பழுத்தல் மஃத்திரம் சித்திரை வைகாசி தொட்டுப் புரட்டாசி வரையில் நடக்கும். பழமென்பது விதை யாதலாலும், விதையென்பது உயிரின் தூக்க மாதலாலும், ஆனிக்குப்பின் பழங்கள் தோன்றுவது இயற்கையே. ஈண்டு நாம் கருதுவது இயக்கம். இயக்கத்தைக் காட்டுகின்ற தளிரெடுத்தல், பூத்தல், பிஞ்சு விடுதல் முதலியவெல்லாம் ஆனிக்குள் நடக்கின்றனவென்பது பொதுவகையால் நோக்குங்கால் உண்மையாம். ஆனிக்குப் பின கார் காலமும் (கார்=கருமை) இலை யுதிர்காலமுந் தொடங்குகின்றன. இலை யுதிர்தலாவது இயக்க மொடுங்குதல். ஆதலின் நிலைத்திணை யுயிர்களின் தூக்கம் ஆடிமுதல் மார்கழிவரையாம்.

மேனாடுகளில் இவ்வுண்மை மிகத்தெளிவாகத் தோன்றுகின்றது. இளவேனில், முதுவேனில், கார் என்று நாம் சொல்லும் பெரும்பொழுதுகளுக்கு ஆங்கிலத்தில் **Spring, Summer, Autumn** என்று பெயர். இங்கிலாந்திலும், பொதுவாக எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் மேற்குறித்த மூன்று பெரும்பொழுதுகளுக்குள் தளிர்த்தல், மலரெடுத்தல், பயன்தரல் ஆகிய செய்திகள் நிலைத்திணையுயிர்களுக்கு நிகழ்ந்து விடுகின்றன. அடுத்து வருங்குளிர்காலத்தில் உறைபனி அங்குலக் கணக்காய்த் தரையிற் படிந்து நிலத்தை மூடுவதாற் பசும்புற்றலையுங் காண்பரிதாகின்றது. ஓரிலை தானுமின்றி மரங்கள் வெறுங் கொம்புகளுங் கிளைகளுமாய் நிற்கின்றன. மேனாட்டுக் குளிர்காலக் காட்சிகளைப் படங்களிற் பார்த்தால் இது நன்கு விளங்கும். இதுபற்றி

முதிர்வயதைக் குளிர்காலத்திற்கும், இளவயதை இளவேனிற் காலத்திற்கு மொப்பிடுதல் மேனாட்டார் வழக்கமாயிருக்கின்றது. இயக்கமுந் தூக்கமும் உத்தராயனத்தையுந் தக்ஷிணாயனத்தையும் பொருந்திவருவது மேனாட்டிற் குருடரு முணருமாறு வெளிப்படுகின்றது. இந்நிகழ்ச்சிகள் செடி, கொடி, மரங்களுக்கே யன்றி ஒரு வகையிலுயிர்களுக்கெல்லாம் பொருந்தும். குளிர் காலமெல்லாம் தூங்குகின்ற சில விலங்குகளு மிருக்கின்றன. இவை உணவெடுத்துக் கொள்ளாமலே குளிர் காலத்தைக் கழிக்கின்றனவென்று உயிர் நூலார் அறைகின்றனர். திருப்பள்ளி எழுச்சி என்று தமிழ்நாட்டில் வழங்குமொரு சொற்றொடர் எவ்வளவு பொருளைத் தன்னுளடக்கிக் கொண்டிருக்கின்றதென்பதை யுற்றுநோக்குக. (தொடரும்)

சிறுமணித்திரள்

திரு M. S. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள், B. A., L. T.

பெரியோர் உரைகளில் இடையிடையே சிறு சிறு மணிகள் மினுங்குகின்றன. அவை அரிய பெரிய பொருள்களை விளக்குகின்றன. அவற்றிற் பெரும்பான்மையும் ஆயுள் நிகழ்ச்சியிற் காணப்பட்டன. சிற்றுயிர்கட்கு உற்றுழித்துணையாயுள்ளன. அதுபற்றியே பின்வருஞ் சிறுமணிகள் திரட்டப்பட்டுத் தரப் பட்டுள.

1. சாதாரணமான விவேகிகள் பொது விதிகளை விலக்கார்கள். சோர்வுடையவர்கட்குப் புகலிடம் சூட்சியேயாம். எக்காரணம் பற்றியும் அவர்கள் சூட்சிக்கு அதிகமாக ஒன்றையும் செய்ய நினையார்கள்.

2. விலங்கனைய மாக்கள் உயிர் நிலைப்பதற்கு இன்றியமையாத வுணவையே நாடுவார்கள். அன்னாருக்கு நூதனமாகப் பொருள்களைக்கண்டு பிடிக்கும் அவா இருப்பதில்லை. ஆனது பற்றிச் சிருட்டியினதிபதிகளென்ற பெருந்தன்மைக்குரிய மினுங்கும் மனவொளியை விருத்தி செய்யத் தக்க மனப்பாங்கு அவர்கட்கு அமைதலில்லை போலும்.

3. சமூக வாழ்க்கை இன்பங்களைப் பெறுவதற்குத் தடையாயுள்ள உலகக் கவலைகளினின்று விலகிப் போகும் வழியை மாக்களறியார்.

4. நாட்டுப் புறங்களிலுள்ள குடிபடைகளுக்குப் பண்டைய சூதுவாதில்லாத இயற்கைத் தன்மையுண்டு. அவர்களிடம் அன்பின் பொழிவும் சேர்க்காளியுணர்ச்சியும், காணப்படும் விருந்தினரை யோம்பும் வழக்கமுமுண்டு.

5. விருந்தோம்புதல் நன்மனதைக் காட்டுங் குறியென்பர்; பாத்திரமறியாத வேள்வியைப் பயிலுதல் மனச் சோம்பலையும் மடமையையும் விளக்கும்.

6. உலகில் ஆசாரம் என்பது பயின்ற மனதின் துலக்கமென்பதில்லாமல் ஓயாமல்கும்பிடுதலும் குழைத்திடுதலுமாகவே யிருக்கின்றது.

7. பொருளீட்டத்தால் ஏற்படும் உபசாரமும் பெருமையும் உண்மையுடையனவாகா. கேடில் விழுச் செல்வமென்ற கல்வியின் பயனாகிய மரியாதையே மாண்புடையது.

8. நள்ளிரவே மாந்திரியவேளை யெனப்படும். அவ்வேளையின் ஆற்றொழுக்கு மக்களின் இசை யொழுக்கினுமிகும். அப்பொழுது அமைதியாற்றுந் தேவதைகள் வெளிவந்து மக்களின் மனவமளியைச் சாந்தப் படுத்தும். அக்காலம் சந்ததமே என்பர். அந்நேரத்தில் உலக வல்லல்கள் காணுங் கனவுகளாக மாறுகின்றன; காதலின் முதல் நம்பிக்கை போலவும், அநுபவித்த வின்பஞாபகம் போலவும் சாந்தமும் வசீகரமுமான ஆழ்ந்த சிந்தனைகள் தோன்றுகின்றன. விதியற்றவன் வாழ்வு எதிர் காலத்து முளதாகின்றது. சஞ்சலமுற்ற நெஞ்சு படுந்துயரத்தை உலகச் சந்தடியில் தொலைத்தலியலாது.

9. வேலையாட்களுக்கு மிகக்குறைந்த கூலி கொடுப்பதால் களவு செய்தலவசியமாகின்றது. அடிமைத் தனத்தால் பொய்ம்மையும் மடமையும் ஏற்படுகின்றன. மக்கட் பிறப்பின் பெருமையைப் பாராட்டும் மனிதர்கள் வேலையாட்களிடம் கருணையுடையவர்களாயிருத்தல் நலம்.

10. ஆனந்தமான வாழ்வு போகாறகலுதலால் வாராது. அயலாரினுமதிகமான ஆனந்தமடைய அவாவுவோர் பாடுபடும் பண்ணையாட்களே இன்புறச் செய்வோராவர்.

11. வீட்டுப் பணியாட்களும் திருடர்களாயிருக்கலாம், அவர்கள் வழிப்பறி செய்வோரினுங் கொடியவராயிருக்கலாம். அவர்கள் பெரிய நகரங்களிற் கருவுறுகின்றனர். திரவியப் பெருக்காலுண்டாகும் இச்சைகளின் பயன்களே அவர்கள் நிர்ப்பந்தத்தை விட்டுத் தப்புவதற்குக் கடும்பாடுபடுபவர்கள் அவர்களல்லர்.

12. எதிர்பாராத புதுச் செல்வம் வந்துற்றக்கால் பலதீயொழுக்கங்களும் பிறக்கும். அவற்றால் மக்கள் மாக்களாகின்றனர். பொருளீட்டற்கு அவசியமான உழைப்பிற்குத் தக்கவாறே அச்செல்வரும் ஆனந்த முறுகின்றனர்.

13. பிரஞ்சு தேசத்தில் தலைதடுமாறிய குழப்பத்தால் சில நன்மைகளுமுண்டாயின. முடி மன்னர் யாண்டும் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டு மென்பதொன்று. பெருந்தகையாளருக்குப் பெருமைக் குறைவு மற்றொன்று. குடிகள் மடமை பொருந்திய மரியாதை செய்தலை யொழித்தனர். அன்றியும் மேலோர் தங்களுக்குச் செய்யும் கொடுமைகளைப் பயமில்லாமல் எடுத்துரைக்கும் ஆற்றலைப்பெற்றனர்.

14. குடித்தல் கூடாது. இதனை உபதேசித்தல் நலம். சாராய ஆலைகள் அதிகப்படுகின்றன. அவற்றால் வரும்பொருள் தொகை அரசியல் வருவாய்களிலொன்றாய் இருக்கின்றது. கள் தீர்வை அதிகப் பட்டால் வருமானம் அதிகம். குடிப்பவர் குடித்தே தீருவர். ஏழைகள் வறியர்களாகின்றனர். அரசியலார்கள் சாராயக்கடை வருவாய்கள் ஒழித்தால் குடிகளும் வறுமை யெய்தாமல் தழைப்பர், நல்லொழுக்க மெய்துவர்.

15. வம்பளப்புக்கு மூலம் சோம்பலேயன்றி தீயஇயற்கையன்று. சோம்பேறிகளே மனதைச் சுருங்கச் செய்யுஞ் சிறிய காரியங்களை விடாமல் கவனிப்பார்கள். அற்ப காரியங்களிற் கவனஞ் செலுத்துவதால் அதிக வுபயோகமான பெரிய காரியங்

களை யாக்குதல் இயலாது. நல்லொழுக்கத்திற்கு அடிப்படைப் போடவு முடியாது.

16. தலை நகரமும் தனித்தவுறைவிடமும் அறிவையும் அன்பையும் பெருக்குவதற்கு மிகச் சிறந்த கருவிகளாம். இரண்டும் நம்மை நாமறிவதற்கும் நாம் உலகை யறிவதற்கும் இயற்கை யமைப்பை யறிவதற்கும் இன்றியமையாதன. உலக மக்களிடங் கலத்தலால் நம்முடைய தப்பான எண்ணங்களைப்பற்றி நாம் ஆராயவும், அவற்றை ஆய ஆய அவை யொழியவும் இயலும் நாட்டுப் புறங்களில் இயற்கை யமைப்புடன் பழகப் பழக மனப்பாங்கிற் கொத்த பல நல்லெண்ணங்கள் சாதாரண மக்களுக்குத் தென்படாமல் நாகரிகர்களுக்குத் தோன்றுகின்றன. அவை விரிந்த ஆன்ம விசாரணைகளுக்கு இடங் கொடுக்கின்றன.

17. மனப் பயிற்சியும் மனச் சுவையும் வளர நாகரிகம் வளர்கின்றது. இயற்கையுணர்ச்சி கட்டுப்படக் கட்டுப்பட ஆவல்கள் வேகமடைகின்றன. அப்பொழுது அவை உறுதியான பொருள்களைப்பற்றி நிற்கும். இலை யெனில் தோன்றியழிவனவற்றையே மேற்கொள்ளும். சுகமும் சோம்பலுமே முறை திரையற்ற புணர்ச்சிக்கு ஏதுக்களாகும். உடம்பின் வலுவிற்குத் தக்கவாறு மனவுழைப்புச் செய்யாதவனே சோம்பேறி யெனப்படுவான்.

18. இயற்கை நந்தாவனம் தென்னாடேயாம். அதிற்றான் ஆதி மக்கள் வாழ்ந்தனர். ஆங்கு சூரிய வணக்கம் இயற்கைப் பழக்கமாவதிலை. ஏனெனில் எந்நாளும் கதிரவன் தோன்றுவான். அவன் அற்ப சொற்பமாகத் தோன்றும் வடநாட்டிலுள்ளார்க்குக் காயத்திரி ஜெபம் இயல்பாகும். குளிர்ந்த தேசத்திலுள்ளவர்கள் பருதியைப் புகழ நியாயமுண்டு; பருதி யொளிருந் திசை நோக்கிப் போவார்கள். சூரியோதயத்தைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுவார்கள். போன விடங்களில் பயிர் செய்து பிழைப்பார்கள். நாகரிக முதிராத மக்களே அபாயத்திற்குப் பயங் கொள்ளாத் துணிவுடையவர்களாயிருப்பார்கள். முகம்மதிய கிறிஸ்தவமதப் போர் வீரர்களே இதற்குத் தக்க சான்றாவர்.

19. மக்களுள் இயற்கை வேற்றுமைகளும் செயற்கை வேற்றுமைகளுமுள. இவ்வேறுபாடுகளைக் கவனிக்கப்படுவதில்லை. சீதோஷ்ண நிலைமையாலுண்டாகும் உற்சாகம் அல்லது யூகம், இன்பமல்லது இன்னா, இவை இயற்கை வேறுபாடுகளாகும். ஆட்சி முறை வகை, சமய முறைவகை இவற்றாலுண்டாகும் வேறுபாடுகள் செயற்கையாலுண்டாவன. அவை பல, நிலையாமல் மாறுவனவாம்.

20. அடிமைகள் சுறுசுறுப்பாயிருப்பதற்குக் காரணமில்லையாதலால் அவர்கள் சுயநயங் கருதிச் சுயபுத்தியைத் தீட்டுவதில்லை. ஆனதுபற்றி அவர்கள் விலங்குகள் போல் திரிவார்கள். அவர்கள் கலைகளைப் பயிலுவதுமில்லை. தொழில்களைக் கற்பதுமில்லை. விருத்தி செய்யும் ஆத்திரமும் ஏற்படுவதில்லை.

21. இந்நூற்றாண்டின் சிறப்பு ஆராய்ச்சி செய்தலேயாம். இதனால் இனி வருந் தலைமுறைகளுக்கு அறிவுதிரளும். இத்திரட்சியால் பொய்யான வழக்க வொழுக்கங்கள் இறுதியுறும். இவை உறுதிப்பாடெய்துவது மடமையின் உறுதியான நிலைமையைப் பொறுத்ததாகும்.

22. பெண்கள் பருவமுறும் பொழுது தங்கள் நெஞ்சைத் தங்கள் கோட்பாடுகளுக்குப் பலியிடவேண்டும், அல்லது தங்கள் கொள்கைகளைத் தங்கள் நெஞ்சிற்குப் பலி கொடுக்க நேரிடும். ஆதலால் சிறுவயதிலேயே நல்லுணர்ச்சியையும் அருமையான கருத்துக்களையும் பயில்விக்கவேண்டும். இல்லெனில் ரோசாப் பூவிற்குச் செந்நிறம்பெருகப் பெருக அதன்முட்களும் வளர்ந்து கை கொல்லுவது போல நெஞ்சைப் புண்படுத்தும்.

23. உறுதியான எண்ணங்கள் உருக்கமான நெஞ்சில் தோன்றினால் அவற்றைக்கெடுத்தலாகாது. உறுதியான வுணர்ச்சிகளே மனக்கிடக்கைகளாகின்றன. தோன்றி மறையும் புலப்பாடுகளை அன்புடன் ஞாபகப்படுத்துவது மனோபாவமே.

24. அரசியற் பேச்சால் அறிவு விரியும், அகம் பெருகும் என்பர்.

25. நம்பிக்கையற்ற மூர்க்கமான செய்கை திருந்தத்

தகாத தீயொழுக்கத்தால் வருவதன்று. இதுசிரசாக்கினை நியாய மென்பதைக் காட்டத்தகும் போலிச் சாக்குப்போக்காகும்.

26. யாக்கையைப் பாதுகாக்குமாசை உலகெங்குங்காணப் படும். தசை, தோல், எலும்பு இவை அழுகாதிருத்தற்பொருட்டு உயர்ந்த உறுப்புகளைப் பாழடையச்செய்கின்றனர். சிலர் சாம்பல் சாம்பலுடன், புழுதி புழுதியுடன் என்ற வாக்கியம் ஆயும் மன திற்குவரும். இயற்கையழிவினுங் கேடானது சமாதி வைத்த லாகும். யாக்கையினிழிதன்மையை மூடிவைக்கும் போர்வை யைப் பிரித்தெடுத்துக் காட்டுதல் பைம்மறியாப் பார்த்தலாகும். அது மனிதத் தன்மைக்கே துரோகமாகும். கூட்டைவிட்டுயிர் போனபின் அதனைக் காப்பாற்றுதல் சாவின் ஆபாசத்தை விளக் குவதாகும். உன்னதப் பொருள்களின் அழிவைச் சிந்தித்தலால் மனத்தை யுயர்த்தத் தக்க மனக் கோட்டரவுண்டாகும். முன் னிருந்த மக்களின் முயற்சிகள் அரசாங்கங்கள் அரசர்களின் தலை விதிகள், காலத்தால் விளையும் பெருங் கேடுகள், இவற்றை யுன் னும் பொழுது இவை விருத்தியினிமித்தம் ஏற்படும் கால மாறு தல்களாகவே தோன்றும். உன்னுந்தோறும் உன்னுந்தோறும் நம் ஆன்மா அகலுகின்றது. நம் சிறுமையை நாம் மறக்கின்றோம். அழிந்துபோக வேண்டியனவற்றை அழியாமலிருக்குமாறு செய்யு முயற்சிகளால் இத்தகைய துன்புறுத்தும் ஞாபகங்கள் வருகின்றன. உயிரே; நீ யார்? இந்த மூச்சுயாண்டுச் செல்கின் றது? யானென்ற இந்த ஆணவம் எங்கே போகின்றது? எந்தப் பிரகிருதிப் பொருளிற் கலந்து அதனை ஊக்கியும் தானும் ஊக்க மடைகின்றது? கிளர்ச்சியின் மாயத்தை யுடைக்க வல்லது எது? நெஞ்சில் சுகந்தமிட்டு அன்புடன் வைத்த எவ்வுருவையும் எவ ரும் அழுகுமாறு வைத்துப் பாரார். இதை நினைக்கில் குடல் குமட்டுகிறது. சமாதியிலுள்ள செல்வரின் சிறப்பு இதுதானோ? மேலோர் கீழோர் எல்லோரையுஞ் சமப்படுத்தும் வாளைக் கொண்டு மக்கட் சிறப்பினை அறிதல் நன்றாகும். நாம் மனிதப் பெருமை நிலையாமைக்கு ஞாபகச் சின்னமாக விருத்தலினும் அனைவரும் அனைத்துஞ் சமமே யென்றல் சிறப்பன்றோ?

27. வறுமையே தீ யொழுக்கத்திற்கு மூலம். ஆதலால்

ஒவ்வொரு தொழிலாளிக்கும், கைக்கூலிகள் தவிர, ஊழியத்திற்குப் போதுமான சம்பள மேற்படாத நிலைமையில் நல்லொழுக்க மேற்பட நியாயமேயில்லை. வலிமையுற்றோர் சோம்பேறிகளாகிறார். ஊழியத்திற்குத் தக்க ஊதியங் கிடையாமையால் மக்கட்கு இழிமை நிகழ்கின்றது. முதலாளி, ஊழியக்காரன் என்ற இச் சகப் பெயர்கள் ஏற்படுகின்றன. எவருமறிந்த கேடான கூட்டுறவும் மலிகின்றது.

28. பகுத்தறியாத வேள்வியால் விளையும் மானக்கேடான களியாட்டு நாளடைவில் ஆண்மையாகமாறிச் செவ்விய நடை பெறினும் பெறலாம் இவ்விதமாற்றம் திடீரென்று உண்டாகாது.

29. வக்கீல்கள் வெட்டுக்கிளிகளனையர், மக்களுக்கு அறிவு பெருகப் பெருக இவ்வெட்டுக் கிளிகளும் குறையும், சுயநலம் பாராட்டும் பெரும் பான்மையோர் சிற்சில வழிகளில் தங்களறிவைச் செலுத்துவர், பொதுநன்மைக் குழைக்க அவர் மனஞ் செல்வதில்லை. சட்டநியாயம் பேசுவோர் ஏனையரினும் அதிகமான சூட்சியுள்ளவராய்ச் சுயநலமே கருதுவர். தீயொழுக்கிற் காணப்படும் இக்கூடாமையான அறிவாளிகள் சரி, தப்பு என்ற விபரத்தை யடைய வொட்டாமல் நல்லொழுக்கத்தைக் கீழறுக்கின்றார்கள்.

30. மக்களறிவிலிகளாயிருத்தலால் மன்றாடிகள் கலகங்களை உண்டுபண்ணுகின்றனர். வெகுகாலமாக அவர்கள் பேதை மக்களிடைச் சண்டையை மூட்டி அவர்கள் பொருளைக் கொள்ளையிடுகின்றனர். சரியான பஞ்சாயத்துகள் ஏற்படின் சண்டையும் சச்சரவும் ஓயும். மன்றாடிகளின் தொகையும் குறையும், அன்னார் வாழ்வுந் தாழும்.

31. கைக்கூலிவாங்கத் தெரியாத நீதிபதிகள், கோழைகளெனப்படுவர். இக்கோழைகள் வம்பர்களைக் காணின் கொலை கொலையாகப் பயப்படுவர். ஏனெனில் அவர்களால் தங்களுக்கு இடுக்கண் பெருகுமென்ற பீதி அதிகம். தங்களிடங் குற்றங் காணப்படுமென்ற அச்சத்தால் அவர்கள் ஆண்மை கெட்டுப் போகும். சுயநலம் பாரிப்பார் சீரிய வொழுக்கம் இழப்பர்.

நீதிபதிகள் தம்மனச் சான்றின்படியேனும் தம்மனக் கூர்மைப் படியேனும் நடப்பதற்கு இடமில்லை. ஒன்று அநியாயமென்று தங்களறிவிற்கு விளங்கினும் அவர்கள் அதன்படி நடத்தல் கூடாது. நீதிபதிகள் சாட்சிப் பிரமாணத்தால் மட்டும் தீர்ப்புச் சொல்லக் கட்டுப்பட்டவர்களா யிருக்கின்றனர். (தொடரும்)

கம்பன் கவிச்சுவை யமைப்பு

[ஆசிரியர்: திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை]

(௨௯௮-ம் பக்கத்தொடர்ச்சி)

***இச்சிறப்புப் பெயர், தஞ்சைக்கரந்தைத் தமிழ்ச்சங்கத்துப் பத்தொன்பதாம் ஆண்டு நிறைவிழாவில் (28-9-30) திருவாளர் கா. நமச்சிவாய முதலியார், பிரசிடென்சி காலேஜ் தலைமைத் தமிழ் ஆசிரியர் சென்னை. அவர்களால் நாமக்கல் தாலுக்கா லத்திவாடி மிட்டா சமீன்தார் திருவாளர் R. சின்னசாமி ரெட்டியாரவர்கள் உவந்து செய்தளித்த மெடலுடன், பல பண்டிதமணிகள் பாராட்ட வழங்கப்பெற்றது.**

பிறர்க்கு வெளியிடக்கூடாதென்றும், வெளியிட்டால் வெட்கமும் அவமானமும் நேருமென்றும் மறைத்துவைத்த இரகசியங்கள், அறிவுமயக்கத்தாலோ. அதே ஞாபகமான முதிர்ச்சியினாலோ சோர்வுற்று அயர்ந்து வெளியிட நேர்ந்து பின் அறியாது கூறினேமே என்று அஞ்சி அதனை வேறொரு போக்குக் காட்டி மறைத்துச் சமர்த்தித்தல் சிலரிடம் காணப் படுகின்ற இயற்கை. இவ்வாறு இராமாயணத்தில் இரண்டொரு கதாபாத்திரங்கள் நடந்துகொண்டதாகக் கம்பர் ஏற்ற இடத்தில் குறித்திருக்கின்றார். அவற்றை ஈண்டுக் காட்டுவோம்.

சூர்ப்பநகையால் சீதையின் பேரழகைக் கேட்டு மிகவும் மோகங்கொண்ட இராவணன் அக் காமவெப்பத்தைத் தீர்த்தற்குத் தண்ணிய நிலவை வீசும் சந்திரனால் ஆகுமென்று கருதி, " ஈரமுண்டென்பர் ஓடி இந்துவைக் கொணர்மின் " என்றனை தந்தனனாக, அவ்வழி ஏவலர் அழைப்ப, உடனே பகல் மறைந்து சூரியன் க்ரப்பக் கீழ்த்திசைக்கட் பொலிவுடன் மதியமும்

எழுந்தது. அந்நிலவின் தண்மை காமநோயை மாற்றுதற்கு மாறாகப் பின்னும் அதிகமாய் வெதுப்பச் செய்தலால் பெரிதும் ஆற்றாதாகிய இராவணன் அம்மதியை நோக்கி (சந்திரோபாலம்பனம்) நிந்தித்தல் செய்கின்றான்.

"தேயா நின்றாய் மெய்வெளுத்தா யுள்ளங்கறுத்தாய் நிலைதிரிந்து
காயாநின்றா யொருநீயுங் கண்டார் சொல்லக் கேட்டாயோ
பாயாநின்ற மலர்வாளி பறியாநின்றா ரின்மையால்
ஓயாநின்றே னுயிர்காத்தற் குரியார்யாவ ருடுபதியே."

"நட்சத்திரங்களுக்குத் தலைவனாகிய மதியே சீதைகாரணமாக மன்மத பாணங்களால் வருந்துகின்ற என் வருத்தம் உன்னால் நீக்கப்படுமென நம்பி உன்னை வருவித்தேன்; நீயோ என்போலவே காமநோய் கொண்டு மெலிந்திருப்பதாகத் தோற்றுகின்றனை. எங்ஙனமெனின், யானும் நாட்குநாள் உடம்பு குறைந்திளைத்து வெளுத்தும், மனம் சீதையைப் பல்கால் எண்ணி எண்ணிக் கன்றிக் கறுத்தும், நிலைமை மாறுபட்டு மேலெல்லாம் வெதும்பியும் வருத்தம் மிக்குள்ளேன்; நீயும் அவ்வாறே வர வர இளைக்கும் உடம்புவெளுப்பேறினை; உட்பக்கம் கறுத்தனை; தண்ணிய நிலைமாறி வெம்பும் நிலையை அடைந்தனை; இங்ஙனம் நம் இருவர்க்கும் உடல் நிலை ஒரு தன்மைத்தாகலின் அதற்குக் காரணமாகிய நோயும் ஒன்றேயாயிருத்தல் துணியப்படும். படவே யான் காதல்கொண்ட சீதையின்மீது நீயும்காதல்கொண்டனையாதல் விளங்கும். எனக்குச் சூர்ப்பநகையால் சீதையின் அழகு சொல்லப்பட்டாற்போலவே நினக்கும் அவளைக் கண்டோர் யாரேனும் சொல்லியிருப்பார்கள்போலும். ஒருநோயாளி பின்னொரு நோயினனை நோய் தீர்க்கலாகாதவாறேபோல் உன்னால் நான் நோய் தீர்க்கப்படுவேனல்லேனாதலின் மற்றியாவரே என்னுயிர்காக்கவல்லார்? கூறுதி." என்றுரைத்தனன். சந்திரனுக்குப் பல பெயர்களிருப்பவும் 'உடுபதியே' என்று விளித்தது பல மனைவிகளையுடையோரே காமவின்பத்தைப் புதிது புதிதாய் அநுபவிக்க மனவெழுச்சியுடையோராவர்; தானும் பல மங்கையர் போகம் நுகர்ந்த பயிற்சிபற்றிச்சீதையையுந் திளைக்க விருப்பமுற்றதென்றும், மதியும் பல மனைவிகளாகிய நக்ஷத்

திரங்களை மணந்தவனாதலின் அவனும் புதுக்காமவேட்கையுடையவனாதல் இயல்பென்றும் உட்கொண்டு என்க. இங்ஙனம் கூறியபின் கருதுகின்றான் இராவணன் 'அட! என்செய்தோம். என்னால் வெல்லப்பட்டு எனக்கடிமை பூண்டு எனதாணை வழியொழுகும் ஏவலருள் ஒருவனாகிய இச்சந்திரனோடு என்னென்னவோ பேசிவிட்டோம். அந்தோ! இத்தனையும் காமநோய் தந்த மயக்கத்தால் வந்ததன்றோ? மூவுலகமும் ஒருங்கரசாளும் யான் எப்பெண்ணைக் காமுற்றேனோ அப்பெண்ணையே மதியமும் விரும்பினான் என அவன் முன் கூறவேனால் என்மதிப்பு என் படும்? அவ்வேவலன் என்னை என் நினைப்பன்? நுணலுந்தன் வாயாற் கெடும் என்பதுபோல் என் வாய் சோர்ந்து வந்த வார்த்தையால் அவன் என்னை அவமதித்து நிந்திக்குமாறு நேர்ந்ததே! இதற் கென்செய்வது? ஆயினும் ஒன்று கூறி இதனை வேறொரு வகையால் மறைக்கவேண்டும்' என்று துணிந்துமீண்டும் அவ்வம்புலியை நோக்கிக் கூறத்தொடங்கினான்:—

ஆற்றாராகிற் றம்மைக்கொண் டடங்காரோவென் றாருயிர்க்குக்
கூற்றாய்நின்ற குலச்சனகி குவளை மலர்ந்த தாமரைக்குத்
தோற்றாயதனா னகங்கரிந்தாய் மெலிந்தாய் வெதும்பத்தொடங்கி
மாற்றார் செல்வங் கண்டழிந்தால் வெற்றி யாக வற்றாமோ.

"ஓ! மதியமே! யான் முற்கூறியவாறு நீயடைந்த நோய் சீதையால் வந்ததாயினும் எனக்கும் உனக்குங்கருத்து வேறுபாடுண்டு. யான் அவளைக்கூடி முயங்க விரும்பிமெலிவேன்: நீயோ அவளது முகமாகிய தாமரைக்குத் தோற்றுவிட்டதால் மெலிகின்றனை; அந்தோ! பாவம்! உன் ஒளி கண்டு இராக்காலங்களில் வாடித் தோற்கும் இயல்பையுடைய தாமரைகட்கு மாறாக இச்சீதையின் முகமாகிய தாமரை ஒன்றும் உன்னை இலட்சியம் செய்யாமல் நின் முகம் வாடுமாறு பொலிந்து விளங்குகின்றது. இச்செயல் நின் நெஞ்சு சுடுதலால் உட்கரிந்து மெலிந்து வெதும்பலுற்றனை. ஆம். செய்வதென்? தம் பகைவரை வென்று மேம்படும்வலியில்லாவிடில், தங்கள் ஆற்றலின்மையை யறிந்து வருந்துகின்ற மனதை வேறொருவழியால் தேற்றிக்கொண்டு அடங்கியிருத்தல் தான் நன்மை. பகைவர் பெருஞ்செல்வத்தைக் கண்டு

பொறுமைகொண்டு பொங்கினால் அஃது வெற்றிதருவதாகுமோ! ஒன்று கேள்: எல்லாத் தாமரைகளும் உன்னால் குவிக்கப்பட்டுப் பொலிவழிய, சனகிமுகத் தாமரைமாத்திரம் அச்செயலுக் குட்படாது வீறுபெற்றிருத்தற்கு மிக நுட்பமாகிய காரண முண்டு, அதனாலேயே அதனைக் குவிப்பிக்க உன்னாலியலா தாயிற்று. நீ அறிவையோ? அறியாயேல் சொல்கின்றேன்கேள். உன்னைக் கண்டலரும் குவளையை (கண்) அம்முகத்தாமரை தன்னுட் கொண்டிருத்தலால், அத்தாமரை நினக்குக்குவிய நேரும் போது அதனுள்ளிருக்கும் குவளை, அதனைத் தான் மலர்தலால் மலர்த்தி இங்ஙனம் அஃது தோல்வியுறாமல் உன்னைத் தோற்கும் படி செய்து வெல்கின்றதனை அறிக" என்று முன் கூறியதனை மாற்றி வேறொரு சூழ்ச்சியால் சமர்த்தித்ததாக உரைத்தனர்.

மற்றோரிடத்தில், இராவணன் சீதையின்மேல் கொண்ட மோகமிகுதியால்மயங்கிக் காணுமிடங்களிலெல்லாம் உருவெளித் தோற்றமாகச் சீதையைக் கண்ணுற்று இத்துணை சீதைகளில் உண்மைச் சீதை ஒருத்திதானுளள். அவள் யாவளென்று தெரிவித்தற்கு நேரிற் கண்டறிந்தவளாகிய சூர்ப்பநகையை ஈங்கு வருவிக்க என்றாணையிட்டனன். அவ்வாறே வந்த அவளோடு தங்காய்! என் பார்வைகள் படுமிடங்களிலெல்லாம் தோன்றும் எண்ணிறந்த இத்துணை சீதைகளுள் மெய்ச்சீதையைக் காட்டுக என வினவினனாக, அச்சூர்ப்பநகையும், அவ்வாறே இராமன் மேற் கொண்ட காமநோய் கைம்மிக்குமயக்குறுத்த யாண்டும் இராமனையே உரு வெளியில் காண்கின்ற நிலையினளா யிருந்தமையால் அண்ணா!

செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயினோடுஞ்
சந்தார்தடந் தோளொடுந் தாழ்தடக் கைகளோடும்
அந்தாரக லத்தோடு[அ]ஞ்சனக் குன்றமென்ன
வந்தானிவ னாகுமவ்[வா]வி லிராமனென்றாள்.

இங்கே எப்பக்கத்தும், அன்றும் எழில் நிரம்பிய திருவடிவங்கள், செந்தாமரை யனைய கண்கள், செவ்வியகனிபோல் சுவைத்து மகிழ்தற்கேற்றவாய், சந்தனப் பூச்சினவாகிய பெரியதோட்கள், முழங்கால்வரை நீண்டு நீளுயர்ந்த கைகள், மாலையணிந்த மார்பு

இவற்ருேடு ஓர் நீலமலை எதிர் நின்ருற்போலக் காட்டுவனவாக லின் இவனே அவ்விராமன் என்பான் காணுதிஎனத் தன்னெஞ் சுட் கிடந்த இரகசியத்தை மறதியாக வாய்விட்டுரைத்தனள். உரைத்திடலும், இராவணன் சற்றுத் தெளிந்து: அம்மா! நான் கண்டது முற்றும் பெண்ணுருக்கள், நீ கூறுவது ஆணுருக்க ளாக விருக்கின்றன. இஃது அம்மனிதர் செய்த மாயமா? என்று விரைந்து வினுவ, அதனைக் கேட்டவுடனே சூர்ப்பநகைக்கு மயக்கவுணர்வுதேறி நல்லுணர்வு தலைப்பட்டது. அடடா! என்செய்தேன்! என் பாழ்த்த பேதமை இவ்வளவு இக்கட்டில் காட்டிக்கொடுத்துவிட்டதே, எப்படி என்னை நல்லவளென்று இராவணனுக்கு நம்பிக்கை வரக்காட்டுவேன்; அவன் சீதைபாற் கொண்ட மோகத்தால் அவளையே காண்பவனுகவிருக்க, நானும் இராமனையே காண்பவளாகஉளறிவிட்டேனே. அவன்என்னையும் ஐயுறக்கூடுமே என்று விசாரத்துடன் எண்ணிக் கடைசியில் ஓர் உபாயத்திஞல் அக்கருத்தை மாற்றவும், தான் வாய்சோர்ந்து கூறியதைச் சாமர்த்தியமாக மறைக்கவும் தொடங்கி, அண்ணு! நீர் காணும் அப்பெண்ணுருக்கள் மனமயக்கத்தால் வெளித் தோற்றும் உருவம் போலிகள் என்றுரைத்தாள். மீட்டும் இராவ ணன் நோக்கி, அப்படியாயின் யான் காமமிகுதியால் சீதையை உருவெளியிற்காணல் இயற்கை. நீ அவ்விராமனை அங்ஙனம்காண் பதற்கேதுயாது? என்றனன். அடிவயிற்றைப்பிசைந்துகொண்டு சூர்ப்பநகை ஓர் யுக்தி செய்கிருள்.

எந்நாளவனென்னை யித்தீர்வரு மின்னல்செய்தான்
அந்நாண்முதல் யானுமயர்த் திலனுகுமென்ருள்.

காமமோ கோபமோ ஒருவர்மேல் மிக்கிருக்கும்போது அவரை இடைவிடாது நினைக்கும் தன்மைபற்றி உருவெளித்தோற்றம் புலப்படும். எந்தக் காலத்தில் என் 'து ட உறுப்புக்களைக் குறைத்து மானபங்கம் செய்தானே ன்று ராமன், அதுமுதல் அதனை நான் வெகுளிபொங்க நினைத் றிந் வ்வாறு செய்தனனே என்று ஆத்திரங்கொண்டுள்ளேன். ஆ ண்டு என்கண்கட்கு அவ னுருவமே புலப்படுதற்கும் நியாய 5 செ என்று பகர்ந்தனள்.

என்று நம் கம்பர் இவ்வியற்கையை வெகு திறம்படக் காட்டிச் சொல்வது கற்போர் வியக்கத்தக்க வளமுடையதன்றோ?

மற்றும், நாமொன்று நினைக்கத் தெய்வமொன்றுநினைக்கும் என்னும் பழமொழிப்படி நன்மை கருதிப்பேசும் பேச்சின் போக்கில் பின் விளைவதாகிய தீமையைக் குறிப்பதாகச் சொற்கள் தெய்வச்செயலாய்ப் பொருள்தரும்படி அமைதலும் உண்டு. இதுவும் நாம் உலகில் அருமையாய்க் காணும் நிகழ்ச்சியே. இவ்வாறு சிற்சில சொற்கள் இராமாயண கதாபாத்திரங்களில் சொல்ல நினைத்ததொன்றும் சொல்லியதால போந்த கெடுதலை விளக்கும் பொருளொன்றுமாக அமைந்ததெனு நம் கவியரசர் தெரிவிக்கின்றார்.

இராவணனிடத்தில் சீதையின் வியக்கத்தக்க அழகின் நலங்களைக்கூறி, அன்னவளைப் பெற்றால் நீ இவ்வாறு பாராட்டுவாய் என்று கூறத்தொடங்கும் சூர்ப்பநகை,

இந்திரன் சசியைப்பெற்றா னிருமூன்று வதனத்தோன்றன்
றந்தையுமுமையைப் பெற்றான் றாமரைச் செங்கணானும்
செந்திருமகளைப் பெற்றான்சீதையைப் பெற்றாய்நீயும்
அந்தரம் பார்க்கினன்மை யவர்க்கில்லை யுனக்கேயையா.

என்று கூறுகின்றாள், "ஐயனே! உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் தத்தம் தகுதிக்கேற்ற கட்டழகும் நற்குணமும் பேரறிவும் வாய்ந்த பெண்மணிகளையே மனைவிகளாக அடைந்திருக்கின்றனர். எப்படியெனில், இந்திரன் தன் தகுதிக்கேற்ற பெருமை வாய்ந்த இந்திராணியையும், சிவபெருமானும் அங்ஙனமே உமாதேவியாரையும் மஹாவிஷ்ணு இலக்குமியையும் முறையே மனையாட்டிகளாக அடைந்துள்ளார் அன்றோ? அஃதேபோல், அவரினும் மிக்க தகுதியும் பெருமையும் ஒருங்கெய்திய நீயும் அவர்கள் மனைவிமார்களினும் அழகு முதலியவற்றால் நனியுயர்ந்தாளாகிய சீதையை அடைதல் நிச்சயம். ஆகையால் அடைந்துவிட்டாயென்றே கூறுவேன். முற்கூறியவர்களுக்கும் உனக்கும் வாய்த்த மனைவிமார்களின் சிறப்பை நோக்குமிடத்து அவர்களைப் பார்க்கினும் நீயே மிகவும் பாக்கியசாலியாகின்றனை."

எனக்கூறிய இக்கருத்து, அவள் எண்ணத்துக்கு மாறாக, அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கு, இல்லை உனக்கே எனப் பகுக்கப்படுஞ் சொற்களால், எல்லா நலனகளும் அவர்கட்கே! உனக்கு நன்மை சிறிதும் இல்லை. எனப் பொருள் தருமாறும் அமைந்திருந்தது. என்று நயம்படக்கூறிய கம்பர் மதிநுட்பத்தையும் கருத்தின் ஆழத்தையும் சொல்வன்மையையும் உலகியலறிவையும் கற்போரைப் பரவசப்படுத்தும் புலமையின் மேம்பாட்டையும் என்னென்போம். இவ்வொரு செய்யுளில் மட்டும் இவ்வாறு கருத்தமைத்தாரல்லர். கீழ்ப்போதரும் இரண்டு செய்யுட்களும் இதேவண்ணம் விகற்பப்பொருளையும் உடன்தருமாறு அமைத்த விசித்திரம் நாமெல்லோரும் உவந்து போற்றிப் பாராட்டத்தக்க அருமைப்பாடுடையதேயாம். அவற்றையும் காண்க.

பாகத்தி லொருவன்வைத்தான் பங்கயத்திருந்தபொன்னை
ஆகத்தி லொருவன்வைத்தான் அந்தணன் நாவில்வைத்தான்
மேகத்தின் மின்னைமுன்னே வென்றநுண் ணிடையையீயும்
மாகத்தோள் வீரபெற்றால் எங்ஙனம் வைத்துவாழ்தி.

“வானளாவும் வீரத்தோள்களையுடைய ஐயா! இராவணா! முற்கூறியவாறு வாய்த்த உமை, திருமகள், கலைமகள் முதலிய மங்கையர்களை அவர்கள் மணாளர்கள் அருமை சிறப்பு அறிந்து முறையே ஒருடம்பின் பாகத்திலும், மார்பிலும், நாவிலும் இடந்தந்தேற்று வாழ்கின்றனர். அம்மூன்று கடவுட் பெண்டிர்களினும் சிறந்தாளாகிய சானகியை நீர் அடைவீராயின் அன்னவளை எங்கே வைத்து வாழ்வீரோ? என்பாற் கூறும்.” என வினவிக் காதலை மூட்டுகின்றாள். இச்செய்யுளிலும் நீர் எங்கேவைத்து வாழப்போகின்றீர் என்னும் சொற்கள் வாழமாட்டீர் என்று தொனித்துப் பின்வருங் கேட்டைக் குறிப்பதாக வரைந்திருக்கின்றன.

பிள்ளைபோற் பேச்சினாளைப் பெற்றபின் பிழைக்கலாற்றாய்
கொள்ளை போகின்றசெல்வ மவளுக்கே கொடுத்தியையா
வள்ளலே யுனக்குநல்லேன் மற்றுநின் மனையில்வாழும்
கிள்ளைபோன் மொழியார்க்கெல்லாங் கேடுசூழ்கின்றேனன்றே.

"ஐயா! இராவணு; மழலைச் சொற்போல் இன்பம் வரப்பேசும் அச் சனகியை நீ அடைந்தபின், அவற்கு ஓர் தவறும் இழைக்க நீ துணியமாட்டாய். மிகுந்த நின் செல்வத்தைமுற்றும் அவட்கே கொடுப்பவனுவாய், இன்னணம் பேரழகினளாகிய ஒருத்தியை நீ அடைதற்குக் காரணமாயிருக்கும் நான் உனக்கு நல்லவளே யாகின்றேன். என்றாலும், அவளைக் கண்டகண்கள் நின் காதன்மடந்தைகளை மறந்தும் நோக்காவாகலின், அம்மங்கையர்கள் தமக்கு ஒரு சக்களத்தியைத் தந்து இன்பத்தை அறவே தொலைத்தாளிவளென்று வருந்த ஒரு பெருந்தீமை செய்தவளாக முடிகின்றேனல்லனே? என்று பேசினள்." இதனுள் சீதையைப் பெற்றபின் பிழைக்கலாற்ருய் என்ற சொற்றொடர், நீ உயிருடனிராது மரிப்பாய் என்றும், 'செல்வம் அவளுக்கே கொடுத்தி,' என்றது அவள் நிமித்தமே உன் செல்வம் அத்தனையும் இழக்கப்படும் என்றும், 'உனக்கு நல்லேன்' என்றது இறுதிக் காலத்து 'இராமா' என்றுரைப்போர்க்கும் வீடு கிட்டுமெனின் அவன் கணையால் முன்னிலையில்மரிக்கும் நினக்கு வீடுபேறு எளிதேகிட்ட யான் காரணமாயிருத்தல்பற்றி நினக்கு மிக நல்லவளேயாயினேன் என்றும், நின் மனைவிமார்க்குக் கேடு சூழ்கின்றேன்' என்றது உன்னை யிழந்தபின் அவர்கள் தீமூழ்கி இறப்பார்கள் என்றும், பிறிது பொருளுணர்த்துமாறு அமைக்கப்பட்டிருக்கின்றது. இன்னோரன்ன பல இயல்புகளால் தம் காவியத்தை ஏனைக் காவியங்களினும் முதன்மைபெற வியற்றியதாலன்றே கவிச்சக்கிரவர்த்தி என்று தமிழுலகம் அவரைப் பாராட்டுவதாயிற்று.

(தொடரும்.)

சிவஞான போதக்கருத்து

இரண்டாவது சூத்திரம்

முதலாவது அதிகரணம்.

(௩௱௩௰ம் பக்கத் தொடர்ச்சி)

25. சூத்திரத்திற் கூறியபடி "அவையே தானேயாய்" என்பது முதலாவது அதிகரணம். முதலாவது சூத்திரத்துடன் இரண்டாவது சூத்திரத்துக்குப் பொருளால் தொடர்பு இருத்தலை நாம் மேலே கண்டதுபோலச் சொல்லாலும் அதற்குத் தொடர்பு உள்ளது. முதலாவது சூத்திரம் மூன்றாவது அதிகரணத்தில், 'அந்தம் ஆதி' என்ற மேற்கோளிலுள்ள அந்தம் என்னும் சொல்லானது இச்சூத்திரத்து முதலாவது அதிகரணம் "அவையே தானேயாய்" என்ற சொற்றொடருக்கு எழுவாயாக நிற்கின்றது. அந்தம் என்பது அந்தத்தைச் செய்யுங் கடவுள். அதாவது அழித்தற்கடவுளாகிய முதல்வன் ஆகும். அவை என்ற சுட்டுப் பெயர்ச்சொல் மேற்சொன்ன 'அந்தமாதி' என்பதில் விகாரத்தால் தொக்கி நிற்கிற பிரிநிலையேகாரத்தால் விலக்கப்பட்டு நின்ற உயிருலகத்தை (சேதனப் பிரபஞ்சத்தை)க் குறிக்கின்றது. உயிர்கள் பல, ஆதலின், அவை எனப் பன்மையிற் கூறப்பட்டது. இரண்டு சூத்திரத்துக்குமுள்ள நெருங்கிய தொடர்பு குறித்தற் பொருட்டும், சொற்பல்காமைப் பொருட்டும், ஆசிரியர் இவ்வாறு முறையே பொருளாலும் சொல்லாலும் தொடர்பு அமைத்துக் கூறினார் என அறிக.

26. முதலாவது அதிகரணச் சொற்றொடராகிய "அவையே தானேயாய்" என்பதனை இரட்டுற மொழிந்து கொண்டுரைக்க" என்று உரை ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தமது சிற்றுரையில் ஆணை தருகின்றார். வழி நூலாசிரியரும் சிவஞான சித்தியாரில் "உலகெலாமாகி வேறாயுடனுமாய்" என்று கூறியதனால், இவ்வாறு உரை செய்தலே தகுதி என்பது பெறப்பட்டது. இரட்டுற மொழிதல் என்பது முப்பத்திரண்டு தந்திர உத்திகளுள் ஒன்று, (நன்னூல் பொதுப்பாயிரம் ௧௪-ம் சூத்தி

ரம்) இரட்டுற மொழிதலாவது ஒரு சொற்றொடரை இரண்டு பொருள்படக் கூறுதல் ஆகும். இங்கே 'அவையே தானே யாய்' என்ற சொற்றொடர், அவையே தானே ஆய் என்ற மூன்று சொற்களை உடையது. மூன்று சொற்களில் ஈற்றில் நிற்கிற ஆய் என்னும் ஆக்கப் பொருட்சொல்லை அவையே தானே என்ற சொற்களுடன் தனித்தனியே அவையேஆய், தானேயாய் எனச் சேர்த்துப் பொருள் கொள்ளுதல் ஒரு பொருள் படக் கொள்ளுதலாகும். அவையே தானே என்ற இரண்டு சொற்களையும் ஒன்று சேர்த்து, அப்படிச் சேர்க்கப்பட்ட அவையே தானே எனபதின் ஈற்றில் 'ஆய்' என்னும் சொல்லைவைத்து அவையே தானே ஆய் எனச் சேர்த்துப் பொருள் கொள்ளுதல் மற்றொரு பொருள்படக் கொள்ளுதலாகும். இவ்வாறு இரண்டு படப்பொருள்கொள்ளும்பொழுது அவையேதானேயாய் என்ற சொற்றொடர் அவையே ஆய் என்றும் தானே ஆய் என்றும் அவையே தானே ஆய் என்றும் மூன்று சொற்றொடர்களாகப் பிரிகின்றது. இந்த மூன்று சொற்றொடர்களின் பொருள்களைத் தனித்தும் ஒன்று சேர்த்தும் கருதுவாம்.

27. மேலே கூறியபடி முதலாவது சூத்திரத்தில் கூறப் பட்ட முதல்வன் என்ற சொல்லை எழுவாயாக வருவித்தும், அவை என்ற சுட்டுப் பெயர்ச்சொல்லுக்கு அதனாற் குறிக்கப் படுகிற உயிர்களை அதற்குப் பதிலாக வைத்தும் அவையே தானே ஆய் என்ற சொற்றொடரை நாம் கூறுங்கால் அது, முதல்வன் உயிர்களே தானேயாய் எனநிற்கும் இரண்டுபொருள் படக் கூறுதற்காக மேலே கூறியவண்ணம் பிரிக்கப்பட்டஅவை யே ஆய்தானே ஆய் அவையே தானே ஆய் என்ற சொற்றொடர்கள் முதல்வன் உயிர்களே ஆய் எனவும், முதல்வன் தானே ஆய் எனவும் முதல்வன் உயிர்களே தானே ஆய் எனவும் வரும்.

28. இரண்டாவது சூத்திரத்தில் முதல்வன் தன்னிடத்தில் ஒடுங்கின உலகத்தை மீளப் படைக்கின்றான் என்று கூறும் பொழுது, அவன் உயிர்களோடு ஒன்றாய் நின்று படைப்பனோ வேறாய் நின்று படைப்பனோ உடனாய் நின்று படைப்பனோ

என்னும் ஐயக்கருத்துக்கள் மாணுக்கர் உள்ளத்தில் நிகழும் அன்ருே? அவ்வையக் கருத்துக்களை நீக்குதற்கு ஆசிரியர் முதல்வன் உயிர்களேயாய் என்ற சொற்ருெடரால் முதல்வன் உயிர்களோடு கலப்பினுல் ஒன்ருய் நின்று படைக்கின்ருன் எனவும், முதல்வன் தானேயாய் என்ற சொற்ருெடரால் முதல்வன் பொருட்டன்மையால உயிர்களுக்கு வேருய் நின்று படைக்கின்ருன் எனவும், முதல்வன் உயிர்களே தானேயாய் என்ற சொற்ருெடரால் முதல்வன் உயிர்க்கு உயிராதற்றன்மையால் உயிர்களோடு உடனுய் நின்று படைக்கின்ருன் எனவும் கூறுகின்ருர். ஆகவே முதல்வன் படைப்புத்தொழில் செய்யுங்கால் உயிர்களோடு கலப்பினுல் ஒன்ருயும், பொருட்டன்மையால் வேருயும், உயிர்க்கு உயிராதற்றன்மையால் உடனுயும் நிற்பன் என்பது முதலாவது அதிகரணத்திற் கூறப்பட்ட மேற்கோளாகும். மேற்கோளின் பொருளை நனி விளக்கப் புகுமுன் அதனைப்பற்றி மாணுக்கர் உள்ளத்தில் எழுகின்ற சில ஐயங்களை நீக்குவாம்.

29. முதலாவது சூத்திரத்தில் ஆசிரியர் **தோற்றம், நிலை, ஈறு** எனப் படைப்பு, காப்பு, அழிப்பு என்று உலகத்துக்கு முத்தொழில்கள் கூறி, இரண்டாவது சூத்திரத்தில் அவ்வுலகத்தை மீளப்படைக்கும் முறைமையை மாத்திரம் கூறுவதாகச் சொல்லுதலினுல் முன்னெடு பின் முரணுதல் ஆகாதோ வெனின், ஆகாது; இயன்றவாறு காரணங்கூறுதும் முதலாவது. சூத்திரத்தில் உலகங்களெல்லாம் அழிந்து, பெரிய அழித்தற் கடவுள் (மகா சங்காரகாரணன்) மாத்திரம் எஞ்சி நிற்கிற இறுதிக் கண்ணுள்ளதாகிய சாந்தியாதீத கலையில் அடங்கிய தத்துவ புவனங்களின் அழிப்பு மாத்திரம் கூறப்பட்டது. சாந்தியாதீதகலையில் அடங்கிய தத்துவ புவனங்களின் தோற்றம்முதல் அழிப்பு வரையுள்ள காலம், 'மாப்பேரூழிக் காலம்' என்று கூறப்படும் (திருவாசகம் திருவண்டப்பகுதி, ௬-வது வரி) சாந்தியாதீதகலைக்குக்கீழ் சாந்தியா கலையில் அடங்கிய தத்துவ புவனங்களின் **தோற்றம் நிலை அழிப்புகள்** சிவபெருமானது அருளைக் கொண்டு, அனந்த தேவரால் நடத்தப்படும். அவ்வாறே வித்தியாகலையில்

அடங்கிய தத்துவ புவனங்களின் தோற்றம் நிலை அழிப்புகள் சீகண்டருத்திரனாலும், பிரதிட்டா கலையில் அடங்கிய தத்துவ புவனங்களின் தோற்றம் நிலை அழிப்புகள் திருமாலினாலும், நிவிர்த்திகலையில் அடங்கிய தத்துவபுவனங்களின் தோற்றம் நிலை அழிப்புகள் அயனாலும் சிவபெருமானது அருளைக்கொண்டு நடத்தப்படும். இவ்வாறு அனந்ததேவர் முதல் அயன் இறுதி யாகக் கூறப்பட்ட நான்கு தேவர்களும் தத்தங்கால எல்லைகளில் படைப்பு, காப்பு, அழிப்புத் தொழில்களைச் செய்கின்றனர். ஒன்றினொன்று நீண்டதாயுள்ள இந்தக், கால எல்லைகளும் **ஊழிகள்** என்று கூறப்படும். ஒவ்வொரு ஊழிக்காலத்தின் துவக்கத்தில் படைப்பும், இறுதியில் அழிப்பும், இடையில் காப் பும் ஆகிய முத்தொழில்களும் அந்த அந்தத் தத்துவ புவனங் களிலுள்ள உயிர்களுக்கு அந்த அந்தத் தேவரால் முத்தொழில் களும் நடைபெறுகின்றன. கட்டுகளை (பாசங்களை) உடைய எந்த உயிரும் எந்த ஊழிக்காலத்திலும் துவக்கமுதல் ஈறுவரை முதலில் எடுத்த உடலுடன் உலகில் உயிர்வாழ முடியாது. ஆத லின் அத்தகைய உயிர்களுக்கு இடையில் முத்தொழில்கள் நடைபெற வேண்டுதல் இன்றி அமையாதது. இனி, ஊழித் தோற்றம் நிலை அழிப்புகள் அல்லாமல் ஒவ்வொரு நாளிலும் ஒவ் வொரு திங்களிலும் ஒவ்வொரு ஆண்டிலும் பல ஆண்டுகள் சேர்ந்த காலத்திலும் தோற்றம் நிலை அழிப்புகளும் உள என்று **சிவாகமங்களும் திருமந்திர** முதலிய சைவ நூல்களும் கூறுகின் றன. சிவன் திருக்கோயிலில் நாடோறும்நடக்கிற வழிபாட்டுக் காலங்களும், திங்கடோறும் நடக்கிற வழிபாட்டு விழாக் காலங் களும், ஆண்டுகடோறும் நடக்கிற வழிபாட்டு விழாக் காலங்க ளும் முத்தொழில்களையும் அவைகளிலடங்கிய மறைப்பும் அரு ளலும் சேர்த்துக் கூறப்பட்ட ஐந்தொழில்களையும் குறிக்கின் றன. முத்தொழில்களும் முதல்வனால் உயிர்கள் பயன் அடை யும்பொருட்டுச் செய்யப்படுகின்றன. காப்பும் அழிப்பும் நிக ழாமல் படைப்பினால் மாத்திரம் குறித்த பயன் உயிர்களுக்கு உண்டாகாது. ஆதலின் ஆசிரியர் இரண்டாவது சூத்திரம் முத லாவது அதிகரணத்தில் முதல்வன் உயிர்களோடு ஒன்றாயும்

வேறுயும் உடனுயும் நின்று படைக்கின்றுன் என்று கூறுங்கால் ஏனைய காப்பு அழிப்புத் தொழில்களும் இனம்பற்றி படைப்புத் தொழிலோடு சேர்த்துக்கொள்ளப்படும் என அறிக.

30. இனிப் படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல் என்னும் ஐந்தொழில்களும் செய்தல் முதல்வனுக்கு **இலக்கணம்** என்று **சிவஞானசித்தியார் திருமந்திரம்** முதலிய நூல்களிற் கூறப்பட்டிருக்க, ஆசிரியர் முதல் முத்தொழில்கள் மாத்திரம் கூறுதல் என்னவென்று கேட்பின், ஐந்தொழில்களும் முத்தொழில்களில் அடங்கும் என்பதே அக்கேள்விக்கு விடையாகும். படைப்பு என்பது சுருங்கக் கூறுமிடத்து உயிர்களின பொருட்டு உடல், உட்கருவி, நிலம், நுகர்பொருள்களை (தனுகரண புவனபோகங்களை) உண்டாக்கி உயிர்களுக்குக் கூட்டுவித்தலாகும்; காப்பு என்பது அவ்வாறு உண்டாக்கிக் கூட்டின கருவிகளை நிலைநிறுத்தலாகும்; அழித்தல் என்பது அக்கருவிகளின் பருமை நிலையை (தூல நிலையை) அழித்து நுண்மைநிலை(சூக்கும நிலை)யாக்கி ஒடுக்குதல். இந்தப் பரும (தூல) மூன்று தொழில்களும் உயிர்களுக்காக உயிர்களுடைய நான்குவகைக் கருவிகளை (Vehicles)ப் பற்றி முதல்வனுற் செய்யப்படுவன. மறைத்தல் அருளல் ஆகிய இரண்டு தொழில்களும் உயிர்களைப்பற்றி முதல்வனுற் செய்யப்படுவன. மறைப்பானது உயிர்களுக்குச் செல்லுமேயன்றி உயிரில்லாத கருவிப் பொருளுக்குச் செல்லாது. அவ்வாறே அருளலும் உயிர்களுக்கேசெல்லும். ஆதலின் மறைப்பும் அருளலும் உயிர்களைப்பற்றியுள்ளன என்பது கூறப்பட்டது. **மறைப்பாவது** உயிர்களுக்கு முதல்வனுடைய சிறப்பு இயல்பை உணரும் மெய்யுணர்வு தோன்றும் காலம் வரையும் ஆணவமலத்தின்வழி நின்று வினை நுகர்ச்சிக்கண் சுவைபிறக்கும்படி செய்து அவைகளை நடத்துதலாகும். ஆகையால் இந்த மறைப்புத் தொழிலானது முத்தொழில்களிலொன்ருகியகாப்புத் தொழிலில் அடங்கும். **அருளலாவது** முதல்வன் தீவிரதர சத்திநிபாதம் அடைந்து பக்குவ முதிர்ந்த உயிர்களைத் தன்னுடன் இரண்டறக் கலந்து மீட்சியின்றிப் பேரின்பம் நுகரும்படி செய்தல் ஆகும். மேலான பேரின்ப நிலை அடையப் பக்குவமில்

லாத உயிர்களுக்கு அவரவர் பக்குவத்திற்குத் தகுந்தபடி அருள் லும் அருளலாகும். இவ்வாறு முதல்வன் செய்யும் அருளை அறிந்து பயன் அடைதற்கு ஏற்றகாலம் அவன்செய்கிற அழிப் புத்தொழிலினால் உயிர்கள் ஒடுக்கம் அடைகிற காலம் ஆதலின் அருளலானது அழிப்புத்தொழிலில் அடங்கும். ஆதலின் முத லாவது சூத்திரத்திற் கூறப்பட்ட முத்தொழில்களில் படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல் என்னும் ஐந்தொழில்களும் அடங்கும். உயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்தல் முதல்வனுக்கு இலக்கணமாகும். ஆகவே முதல்வன் உயிர்க ளின் பொருட்டு ஐந்தொழில் செய்யுங்கால் அவ்வுயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பன் என்பது முதலாவது அதிகரண மேற்கோளாக நாம் கொள்ளல் வேண்டும்.

3. இந்த ஐந்தொழிலும் முதல்வன் உயிர்களுக்குச்செய்யும் வகை வேறுபாட்டினால் பருமைஐந்தொழில் (தூலஐந்தொழில்) நுண்மை ஐந்தொழில் (சூக்கும ஐந்தொழில்) மிக்க நுண்மை ஐந்தொழில் (அதிசூக்கும ஐந்தொழில்) என முத்திறப்படும். பருமை ஐந்தொழில் (தூல ஐந்தொழில்) முதலாவது சூத்திரத் திற் கூறப்பட்டது. அது மேலே காட்டப்பட்டது. அது இறைவனால் உயிர்களின்பொருட்டு உயிர்களுக்குக்கூட்டப்பட்ட கருவிகளிடத்து (Vehicles) நிகழும் நுண்மை. ஐந்தொழிலாவது (சூக்கும ஐந்தொழிலாவது) முதல்வன் உலகத்தை அழிவு செய்து ஒடுக்கியபின் இனிச் செய்யக் கடவதாகிய பருமை ஐந் தொழிற்கு (தூல ஐந்தொழிற்கு) உயிர்கள் தகுதியாகும்படி வேண்டுவனவற்றை அறிந்து நோக்கித் தனி நிலையின்கண் (கேவ லத்தின்கண்) நிகழ்த்தும் ஐந்தொழிலாகும். இது உயிர்களின் பொருட்டு முதல்வனிடத்து நிகழ்வது. இதுவே இந்தச் சூத் திரத்திற் கூறப்படும் ஐந்தொழிலாகும். இந்த ஐந்தொழிலின் வகையைக் கூறுமிடத்து அழிப்புக்குப்பின் உயிர்கள் ஒடுங்கி நிற்கிற நிலையில் உயிர்களுடையபரிபாகத்தை அறிதல் படைப்பு; பரிபாகமில்லாத உயிர்களை ஒடுங்கிய தனி நிலையில் (கேவல நிலை யில்) வைத்தல் காப்பு; பரிபாகமுள்ள உயிர்களை ஒடுக்க நிலை யிலிருந்து (கேவல நிலையிலிருந்து) நீக்குதல் அழிப்பு; ஒடுங்கிய

தனி நிலையில் (கேவலத்தில்) இருக்கும பரிபாகமில்லாத உயிர்க ளுக்கு அவைகள் அங்ஙனமிருப்பதாகத் தோன்றுதிருக்கச் செய்தல் மறைப்பு; பரிபாகமுள்ள உயிர்களை ஒடுங்கிய தனி நிலை (கேவல நிலை)யிலிருந்து உடல் நிலையில் (சகல நிலையில்) விடு தல் அருளல். இனி மிக்க நுண்மை ஐந்தொழிலாவது (அதி சூக்கும ஐந்தொழிலாவது) . முதல்வன் உயிர்க்குயிராயிருந்து உயிர்களை நனவின்கண் விடயபோக நுகர்ச்சியிற் செலுத்தி விட யங்களிலும் கலந்து விடய நுகர்ச்சியை நிகழ்த்துதலாகும். இது கட்டு இலக்கணம் (பாச இலக்கணம்) கூறுகின்ற ஐந்தாவது சூத்திரத்திற் கூறப்படும். இவ்வாறு கூறப்படும் மூவகை ஐந் தொழில்களில் ஒவ்வொரு வகையிலும் மூவகைகளும் உள்ளன, என நாம் ஊகித்து அறிந்துகொள்ளலாம்.

32. மேலே கூறியவாற்றுல் முதலாவது அதிகரண மேற் கோளான முதல்வன் ஐந்தொழில் செய்யும்பொழுது உயிர்க ளோடு கலப்பினுல் ஒன்றுகியும் பொருட்டன்மையால வேறுகி யும் உயிர்க்குயிராதற்றன்மையால் உடனுகியும் நிற்பன் என்பது ஆகும். இதனை நாம் சுருங்கக் கூறுமிடத்து முதலாவது அதி கரணத்திலுள்ளபடி இவ்வுயிர்கள் (ஆன்மாக்கள்) பலவும் முதல் வன் தானேயாய் நிற்கும் என்பது மேற்கோளாகும். இதனை இன்னும் சுருக்கி நாம் கூறினுல் அது சிவஞானபோதச் சூர்ணிக் கொத்திலுள்ளபடி முதல்வன் உயிர்களில் இரண்டற நிற்பன் எனவரும். இது வேதத்திற் கூறப்பட்ட அத்துவிதம் என்னும் சொல்லுக்குப் பொருளாகும் என ஆசிரியர் கூறுகின்றுர்.

33. இந்த மேற்கோளை மறுக்கிறவர்கள் வேற்றுமைக் கொள்கையர் (பேதவாதி) ஒற்றுமைக் கொள்கையர் (அபேத வாதி,) வேற்றுமை யொற்றுமைக் கொள்கையர் (பேதாபேத வாதி,) என்னும் மூவர்களாவர். ஒற்றுமைக் கொள்கையரில் (அபேதவாதிகளில்) ஸ்மார்த்தர்கள் முதலிய ஒரு பொரு ளுண்மை கூறுவோர் அடங்குவர். வேற்றுமைக் கொள்கைய ரில் (பேதவாதிகளில்) மாத்துவர்கள் அடங்குவர். வேற்றுமை ஒற்றுமைக் கொள்கையர்களில் (பேதாபேத வாதிகளில்) பாஞ்ச ராத்திரர்கள் (வைணவர்கள்) அடங்குவர். இந்த மூன்று கொள்

கையர்களில் ஒவ்வொருவரும் மேலே சொல்லிய வண்ணம் முதல்வன் உயிர்களோடு ஒன்றாய் நிற்கும் நிலை, வேறாய் நிற்கும் நிலை, உடனாய் நிற்கும் நிலை என்னும் மூன்று நிலைகளில் ஒவ்வொரு நிலையை மாத்திரம் கைக்கொண்டு அதுவே தங்கள் தங்கள் கொள்கை என்றும் மூன்று நிலைகளையும் சேர்த்துக்கொள்ளுதல் ஒரு முடிவுக்கூற்று (ஏகாந்தவாதம்) அன்றி பல முடிவுக் கூற்று (அநேகாந்த வாதம்) ஆக முடியும் என்று கூறுகின்றார்கள். பல முடிவுக் கூற்று என்பது உடம்பெடுத்தற்கு முன் உயிர் உண்டோ இல்லையோ என ஒருவன் சமணர்களை வினவின், உண்டு என்றாதல் இல்லை என்றாதல் கூறாமல், உண்டுமாம், இல்லையுமாம். உண்டுமாமில்லையுமாம் என அவர்கள் கூறுதல் போல்வது. இந்த மூன்று கொள்கையர்களுடைய கொள்கைகளும் அவைகளை ஏதுக்களுடன் மறுத்தலும் பின் விளக்கமாகக் கூறப்படும்.

34. ஆசிரியர் வேதத்திற் கூறப்பட்ட அத்துவித இலக்கணங் கூறுமாற்றால், ஒற்றுமைக் கொள்கையர் (அபேதவாதி) வேற்றுமைக் கொள்கையர் (பேதவாதி) வேற்றுமை ஒற்றுமைக் கொள்கையர் (பேதா பேத வாதி) என்னும் மூன்று கொள்கையர்களுடைய கொள்கைகளையும் ஏதுக்களுடன் மறுத்து, தாம் எடுத்துக் கொண்ட மேற்கோள் உண்மையை வலியுறுத்துகின்றார். இனி, அத்துவித இலக்கணம் கூறப்படும்.

பரோடாவும் நூல்நிலைய இயக்கமும்

*இது மாடர்ன் ரிவியூவிலிருந்து எடுக்கப்பெற்றது.

பரோடா கெய்க்வார்ட் மகாராஜா அவர்கள் தமது இராசாங்கத்திலுள்ள ஊர்கடோறும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வியைப் பரவச் செய்தனர். எனினும் அதனால் சிறந்த நன்மையொன்றும் ஏற்படவில்லை என்பதை நாளடைவில் தெரிந்தார். ஆரம்பக் கல்வியைப் பெற்றுப் போன இளைஞர்கள் பின் அக்கல்வி வளர்ச்சிக்கு யாதோரியக்க உதவியின்றிக் கல்லாத மூடர்களாகவே காணப்பட்டனர். மகாராஜா அவர்கள் 1907-வது

ஆண்டிலும் 1910-வது ஆண்டிலும் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்திற்குப் போய் வந்ததின் பின் ஆரம்ப இலவசக் கல்வியை நிலைபெறச் செய்வதற்கு இலவசப் பொது நூல் நிலையங்களை ஊர்கடோறும் அமைத்தல் வேண்டு மென்பதை அறிந்தார். அதுமுதல் நூல்நிலைய இயக்கம் ஒன்று பரோடாவில் காட்டுத் தீப்போல் பரவுதலாயிற்று.

நூல் நிலையங்கள்.

நூல் நிலையங்கள் அரசினர், ஜில்லாப் போர்டு, அல்லது முனிசிபாலிட்டி, குடிகள் ஆகிய மூவருடைய கூட்டுறவால் நடைபெறுகின்றன. ஒரு கிராமத்தாரோ, ஒரு நகரத்தாரோ அல்லது ஒரு ஜில்லாவின் தலை நகரத்தாரோ தங்கட்குள்ளே நன்கொடையாக ரூ. 100, ரூ. 300 அல்லது ரூ. 700 வீதம் சேர்க்கின்றனரோ அதே அளவு தொகை அரசினராலும், அதே தொகை ஜில்லாப் போர்டாராலும் கொடுக்கப்படுகின்றது. சில ஊர்களில் முனிஸிபாலிட்டியாரும், ஜில்லாப் போர்டாருமே நன்கொடை வசூல் செய்து நூல் நிலையங்களை அமைக்கின்றனர். அதே மாதிரி லைப்ரேரி கட்டிடங்களுக்கும் குடிகள் சேகரிக்கிற தொகையளவு தனித்தனி அரசினராலும் ஜில்லாப் போர்டாராலும் கொடுக்கப்படுகின்றது.

பரோடாவிலுள்ள மக்களும் நூற் பயிற்சியில் பெரிதும் ஈடுபட்டிருக்கின்றனர். அங்கே 45 நகரங்களிலும், 698 கிராமங்களிலும் இலவச நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 194 சமாசாரப் பத்திரிகை வாசிக்குமிடங்களும் ஏற்பட்டிருக்கின்றன. 1928-29வது ஆண்டு அறிக்கையின படி மொத்தம் 4,94,654 புத்தகங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

வாசிப்பவர்களுக்கு ஊர் ஊராக வீடு வீடாகக் கொண்டு கொடுப்பதற்கு 3,07,350 புத்தகங்கள் இருக்கின்றன. அவை 60,789 பேர்கட்குப் பயனாகி வருகின்றன. அதுகாறும் 103 நூல் நிலையக் கட்டிடங்களும் எழுப்பப்பட்டுள்ளன. அரசினரால் நூல் நிலையங்கட்கென ஓர் இலாகா ஏற்படுத்தி அதற்குரிய சட்ட திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர்

ஊரிலும் நூல் நிலையங்களை நடத்துவதற்கெனக் கமிட்டிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. நூல் நிலையங்களை லைப்ரேரி இலாகாத் தலைவரும், பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்களும் அடிக்கடி பார்வை யிட்டு வருகின்றார்கள். நூல் நிலையங்களை நடத்துவதற்கும் மேன்மேலும் அவற்றை விருத்தி செய்வதற்கும் வேண்டிய வழிவகைகளைச் சில அறிஞர்கள் கற்றுத் தேர்ச்சி பெற்று வருகின்றனர். ஆண்டுதோறும் நூல் நிலையத் தலைவர்களுடைய கூட்டம் ஒன்று நடைபெற்று வருகின்றது. மேற்படி கூட்டத்தைக் கூட்டிவைப்பதற்கு ஓர் கழகம் இருக்கின்றது. அதன் வழி **புஸ்தகாலயம்** என்னும் மாதப் பத்திரிகை ஒன்று குஜராட்டி மொழியில் வெளியிடப்பெறுகின்றது.

சுற்று நூல் நிலையங்கள்.

நூல்நிலை இலாகா வழி சுற்று நூல்நிலையமொன்றேற்படுத்தப்பட்டிருக்கின்றது. 15 முதல் 20 புத்தகங்கள் அடங்கக் கூடியவாறு 400 மரப் பெட்டிகள் அழகாகவும அழுத்தமாகவும் செய்து அவற்றைப் பொது லைப்ரேரிகட்கும், தொழிற்சாலைகட்கும், லைப்ரேரி இயக்கத்தில் ஈடுபட விருப்பமுடையவர்கட்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. ஆங்காங்கே படிப்பவர்கட்கும் அப்புத்தகங்கள் கொடுத்து வாங்கப்படுகின்றன. லைப்ரேரி இலாகாவிலுள்ளார் புத்தகங்களைச் சிறந்த காலங்களில் கூட்டங் கூடுமிடங்களில் பார்ப்பவர் கண்ணையும் உணர்வையும் கவரும் வண்ணம் அழகுபட ஒழுங்கு படுத்தி அமைத்துக் காட்டுகின்றார்கள். அதுவேயுமன்றி மேனுடுகளிலுள்ள லைப்ரேரி இயக்கங்களைச் சினிமாவழிக் காட்டி வருகின்றார்கள்.

பரோடா சென்ட்ரல் லைப்ரேரி.

பரோடா சென்ட்ரல் நூல் நிலையத்தில் பத்திரிகை வாசிப்பதற்குத் தனியிடமும், பெண்மக்கட்குத் தனி நிலையமும், சிறுவர்கட்குத் தனிநிலையமும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. புத்தகங்களை வாசிக்கும்போது ஒத்திடுவதற்கு உதவியாக அகராதிகள், அபிதான சிந்தாமணிகள் (Encyclopædias)போன்ற நூல்கள், அரிய பெரிய பத்திரிகைகள் முதலியவை தொகுக்கப்

பெற்ற தனி நூல்நிலையம் (Reference Library) ஒன்றும் அமைக்கப் பட்டிருக்கின்றது. அதுவேயுமன்றிப் புத்தகங்களைப் பற்றியும் பல்வகைப் பொருள்களைப் பற்றியும் குறிப்புக்கள் கொடுப்பதற்கு ஒரு டிபார்ட்மெண்ட் நிறுவப்பட்டுளது. அதில் நூலாராய்ச்சியிலும் நூல் நிலையத்திலும் ஆராய்ச்சியும், திறமையுமிக்க அறிஞர் சிலர், வேலை பார்க்கின்றனர்.

1929-30ல் அடியில் கண்டவாறு நூல் நிலையத்திற்கு வசூலாயிருக்கிற தொகையினைக் காண்க.

பரோடா சென்ட்ரல் நூல் நிலையத்திற்கு வைக்கப்பெற்றது		ரூ.	56,000
உதவி நூல் நிலையங்கட்காக:—			
அரசினர்	நன்கொடை	ரூ.	33,000
ஜில்லாப் போர்டு, முனிஸிபாலிட்டி, பஞ்சாயத்	,,	ரூ.	32,000
குடிகள் நன்கொடை		ரூ.	34,000
மொத்தம்.		ரூ.	155,000

குறிப்பு:—தெலுங்கு ஜில்லாக்களிலும் தெலுங்கு மொழியைப் பரவச் செய்வதற்கு ஓர் சர்வகலாசாலை ஏற்படுத்தப் பட்டிருப்பதோடு நூல் நிலைய இயக்கமும் பரவி வருகின்றது. ஓராண்டிற்கு முன் சென்னையிலும் லைப்ரரி அசோசியேஷன் ஒன்று ஏற்படுத்தப் பெற்றுள்ளது. ஆனால் அதன் வழி சிறப்பான வேலை ஒன்றும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

LIBRARY

தமிழ் மக்கள் தமிழ் நூல்களைச் சிறப்பாக வாங்குவதோடு தமிழ்க் கலை வளர்ச்சிக்கு வேண்டிய பிறமொழி நூல்களையும் வாங்குதல் வேண்டும். செந்தமிழ் நாட்டில் செல்வர்களும், ஜில்லாப் போர்டு தலைவர்களும், தாலுகா போர்டு தலைவர்களும், முனிசிபல் சேர்மன்களும், பஞ்சாயத் தலைவர்களும், கூட்டுறவுக் கழகத்தலைவர்களும், கல்லூரித்தலைவர்களும், கல்லூரிக கமிட்டிகளின் அதிகாரிகளும் நூல் நிலைய இயக்கத்தில் ஈடுபட்டு ஒவ்வொரு ஊரிலும் ஒரு நூல் நிலையம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகளை இன்றே, இன்னே, செய்து போதருமாறு வேண்டப்படுகின்றார்கள். இதனைச் செய்யின் தமிழ் நூல்கள் பரவிப் பெருகுவதோடு நம் நாடும் அறிவுடைய நாடாகும். நூல் நிலைய இயக்கத்தாலும், சுயமொழி பேணுதலாலும் மேனாடுகள் அறிவிலும் ஆட்சியிலும் சிறந்து விளங்குகின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனியன்றோ ?

தமிழ் மக்களே, தமிழ் நாட்டுப் பல்வகை இலாகாத் தலைவர்களே, இனியும் உறங்காதீர்கள் ! உறங்காதீர்கள் !! உடனே விழிமின் ! விழிமின் !! செய்யத் தகுவனவற்றைச் செய்யின் ! செய்மின் !! இன்றேல் நிலைபெறுவன மடமையும், அடிமையுமே.

திருஞான சம்பந்தர்-செந்தமிழ் நாடகம்.

[திரு. S. முத்துகுமாரசாமியா பிள்ளையவர்கள்]

(௫௪௪-ம் பக்கத்தொடர்ச்சி)

இன்னொருவர் :—அதுதான் சரி, இந்தச் சிறுவனோடு பேச முடியாது. செயலில் பார்ப்போம்,

திருஞான சம்பந்தப் பெருமான் :—(அங்குக் குழுமியிருந்த அமணர்களை நோக்கி) மயிற்பீலிக் கையரே,

மன்னன் துன்புறும்போது, என்னைக் கண்டதும், யாவரும் சூழ்ந்து ஒன்று கூடிக் குதித்தீர்களே! இப்போ, மன்னனும் அமைதியுற்றான். உங்கள் வாய்மை பேசுங்கள்.

அமணர்கள் :—உமக்கும் நமக்கும் என்ன பேச்சு இருக்கின்றது. பேச்சை விட்டுவிடும். காட்சியிலே காட்ட வேண்டும். அதுதான் தக்கது.

மன்னவர் :—(வெகுளல் ஒருபாலும், இவர் அறிவின்மை கண்டு, சிரிப்பு ஒருபாலுமாக "எனது உடலுக்குற்ற வெப்பு நோய் தீர்த்தது, காட்சியில் காட்டியது இல்லை போலும்" நல்லறிவுடையீர்! தங்கள் கேள்வி திக நன்று!! என்ன வாது ?

அமணர்கள்:—அரசே!

என்ன வாதா! கூறுகின்றோம். அவ்வவர் சமயக் கொள்கை குறித்த ஏட்டை நெருப்பிலிடவேண்டும். வேவாது இருப்பது உண்மைச் சமயம் அவரே வெற்றி பெற்றவர்.

திருஞானசம்பந்தர்:—(மன்னரே, இந்த அமணர்கள் தமது குறிப்பறியாது சொன்னதைக் கேட்டு மறுமொழி கூறுமுன்னரே)

அன்பர்களே!

உங்கள் வேண்டுகோள் எதுவோ, அதுவே செய்வோம் உண்

மையே வெற்றிபெறும். இப்போ இந்த அரசன் அவைமுன்னரே தீயை வளர்க்கச் செய்வோம், நினைத்ததை முடிப்போம்.

மன்னவர்:—(ஏவலாளரை நோக்கி)

விறகு அடுக்கித் தழல் பெருக்குக.

திருஞானசம்பந்தர்:—(தன்னுடன் பாடல்கள் எழுதிவரும் சம்பந்த சரணாலயரை நோக்கி) அன்பரே,
தேவார ஏட்டை இங்கு கொணர்க.
(அதில் கயிறு சாத்திப் பார்த்தல் "போகமார்த்த" பாட்டுக் கிடைத்தல்)

சம்பந்த சரணாலயர்:—(கயிறு சாத்திக்கிடைத்த அப்பதிகம் படித்தல்)

திருச்சிற்றம்பலம்.

"போகமார்த்த பூண்முலையாள் தன்னொடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
யாகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே."

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தர்:—அந்த ஏட்டைக் கயிற்றினின்றும் உருவி, வேறுபெடுத்துத் தானே, தீயின் பக்கம் சென்று "தளிரிள வளரொளி" என்ற பதிகம் பாடி, மகிழ்ந்து தீயிலிட்டார்.

திருச்சிற்றம்பலம்.

"தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலில்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தந் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே."

திருச்சிற்றம்பலம்.

ஏடு பசுமையுற்று விளங்கிற்று.

அமணர்கள்:—(கவலையுற்று) தங்கள் எல்லைப் பொருள் எழுதிய ஏட்டைத் தீயிட்டனர். ஏடு உடனே பஞ்சுபோல் பொடியாய்விட்டது.

(கண்டதும் அஞ்சினர். மனஞ்சோர்ந்தார். கைப்பி லிகை விழாது நின்றார்கள்.)

திருஞானசம்பந்தர்:—குறித்த நாழிகை கழிந்தது. தானேபோய் பசுமையாய் இருந்த ஏட்டை எடுத்தனர். யாவருங் காணக் காட்டினர். மீண்டும் ஏட்டோடு கோத்துக் கொண்டார்.

மன்னவர்:—வியப்புற்றார். கைப்பிலி விழாது வீறொடு நிற்கும் அமணரை நோக்கி அடிகண்மீர்,

மறையவர் தம் ஏட்டை எடுத்துக்கொண்டு வந்துவிட்டார் உங்கள் ஏட்டை இந்த நெருப்பில் காணவில்லையே, எடுத்துக் கொண்டு வாருங்கள் பார்ப்போம்?

அமணர்கள்:—இதோ இதோ எடுத்துவருகின்றோம் (என்று தீப் பக்கத்துச் சென்றார்கள்.)

என்ன? இந்தத் தீ மிகுதியாகின்றது. நாம் பக்கத்துப் போகவும் விரைந்து நம்மைச் சுடுவதுபோல், தீ தாவுகின்றதே; நன்று. இச்சிறுவன் ஏதோ மாயஞ் செய்துவிட்டான் (என்று அங்குமிங்கும் போகாது நின்றார்கள்.)

மன்னவர்:—அறிவுடை அமணரே,

என்ன? பேசாது நிற்கின்றீர்கள். தீயை அணைக்கச் செய் கின்றேன். பின்னராவது, ஒருவேளை விறகுக்கட்டையோடு கிடக்கின்றதா ? என்று தேடிப்பாருங்கள்.

காவலாளரை நோக்கி:

காவலரே, இந்த நெருப்பை நன்றாய் நீரிட்டு அணையுங்கள். இந்தப் பெரியவர்கள், தங்கள் ஏட்டைத் தேடிப்பார்க்கட்டும்.

(அவ்வாறே தீயை நன்றாக அணைத்தல்.)

அறவோர்களே, போய்ப்பாருங்கள். எப்படியும் உங்கள் ஏட்டைப் பாருங்கள். (அமணர்கள் தேடிப்பார்த்தும், சாம் பலைக் கையாற்பிசைந்தும் காணாது நிற்றல்.)

மீண்டும் மன்னவர் அமணரை நோக்கி:

நல்லறிவாளரே,

நன்றாகத் தேடுங்கள். ஒருவேளை அந்தக் கரியோடு சேர்ந்து கிடந்தாலும் கிடக்கலாம். நன்றாக அரித்துப்பாருங்கள்.

அமணர்கள்:— (ஒருவர் மற்றவரைப் பார்த்து,)

நமது மன்னன், நமதுமேல், மிகுந்த கருணையோடுதானிருக்கிறான். பாருங்கள், எப்படியுந் தேடிப்பாருங்கள் என்று நமக்கு வேண்டிச் சொல்லுகின்றார். என் செய்வது. நம்மால் வெற்றிபெற முடியவில்லையே. மன்னன்தான் என் செய்வான்? அரித்தாவது பார்ப்போம்.

(அரித்துப்பார்த்தும் காணவில்லை. கவலுற்றார்கள்)

மன்னவர்:— (அமணர்கள் அறியாமைகண்டு சிரிப்புக்கொண்டு:-) துப்புர வுறையீர்,

யான் முன் வெப்புற்று வருந்தும்போது, உங்கள் கைத்திறம் அறிந்தேன். பின்னும், உங்கள் ஏடு இத்தீயிடை இட்டதில் வன்மை யாவுந் தெளிந்தேன். இன்னும், நீங்கள் தோற்றிலீர் போலும்? **என்ன?**

அமணர்கள்:— (மன்னன் கூறிய குறிப்பறியாது)

மன்னே,

இன்னுந் தோற்றிலோம். எதுவும் மும்முறை செய்தல் உலக வழக்கு. இப்போ, இருமுறைதானே ஆயிருக்கிறது. இன்னும் ஒரு முறையும் பார்த்து விடுவோம். இனிச் செய்வதொன்றில் நாங்கள் வெற்றி பெற்றாலும் போதும். அதனையும் காண்போம்.

மன்னவர்:— நன்கு கூறுகின்றீர். குறிப்புச் சிறிதும் உணரா குண்டர்களே, இன்னும் ஒரு வாது வேண்டவும் வேண்டுமா? இருமுறை தோற்றும் ஆசை நீங்கவில்லையே. இனி, வாதிற்கு நான் இடங்கொடேன். (வெகுண்டார்)

திருஞானசம்பந்தர்:— மன்னவ,

மனம் பொறுக்க! வெகுளுதல் ஒழிக! எப்படியும்

(தொடரும்)

The History of the Tamil Grammatical Works of which the நன்னூல் is the Chief

(*Extract From Rhenius' Tamil Grammar*).

The Madura Province, including Tinnevelly, is confessedly the seat of the purest Tamil. Towards Madras it becomes mixed with the Teloogoo and other dialects. About 500 years ago, when Pandiya Rajah was reigning at Madura ; Agastier ; the famous Muni of the Hindoos, lived ; who, upon the desire of the King, wrote the first grammar of the Tamil language ; which was called அகத்திய நூல். He had twelve disciples whom he instructed in the language, one of them was Tolkapiyer, who appeared to be the most clever in acquiring it. Soon after, Tolkapiyer prepared a grammatical work, called தொல்காப்பிய நூல், of which the அகத்திய நூல் was the basis. The former gradually sunk into oblivion ; and is now lost, excepting the fragments contained in Tolkapiyer's work.

Sometime after, when Siyagangen Rajah reigned in Madura, பவணந்தி வித்துவான், Pavanandi Vittuvan, a learned man of the Jaina Sect, abridged the Tolkapiya Nul and called it நன்னூல், of the five parts into which the Tolkapiyam was divided, *viz*.. எழுத்ததிகாரம், *i. e.*, the chapter of letters or orthography ; சொல்லதிகாரம், *i. e.*. the chapter of words or Etymology ; பொருளதிகாரம், *i. e.*. the chapter of matter ; யாப்பு or செய்யுள், *i. e.*, the Chapter of Poetry ; and அலங்கார அதிகாரம், *i. e.*, the chapter on Beauty or Rhetoric, and into which Pavanandi also divided his work, only the two first chapters have been preserved ; the rest are lost ; though they were afterwards supplied by other persons.

After him was a learned man of the சமணர், *i. e.*, the Jaina Sect, who wrote an explanation of the நன்னூல்.

About the same time arose a learned Sivapatti Karen named வயித்தியநாத பண்டாரம், and, pretending to find errors in the text of the நன்னூல், wrote a grammatical work called

இலக்கண விளக்கம், *i.e.*, the light of rules in which he changed some parts of the நன்னூல் ; and added others at his discretion ; but retained the before mentioned division in five parts.

About the year 1770, there was a poet in Tinnevelly, named சங்கர நமச்சிவாயப் புலவர். Upon the request of the Ootamalei Poligar (மருதப்ப தேவன்) he wrote the நன்னூலுரை *i.e.*, an explanation of the text of the நன்னூலுரை made by Pavanandi.

This Sankara Namasivaya Pulavar's master சாமிநாதத்தம்பிரான் (Saminada Tambiran), wrote a grammatical work, which he called இலக்கணக்கொத்து, *i.e.*, a collection of rules; wherein he treats especially on the Tamil declensions and conjugations.

About the same time ; சிவஞானத்தம்பிரான், a learned Sanniyasi, wrote a work, in which he exposes the errors of the இலக்கண விளக்கம், made by the above mentioned Vayittiyanada Pandaram. This work he called இலக்கண விளக்கச் சூறாவளி, *i.e.*, the Blast or Strong Wind on the Light of Rules with which he intended to extinguish the Light of Rules. He wrote also the சூத்திரவிருத்தி, in which he explains the Tolkapiyam, more over ; he undertook to examine and compare the former three works, *viz.*, இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, and சூத்திர விருத்தி ; made the needful extracts, and embodied them in the நன்னூல், prepared by Sankaranamasivayam. The thus enriched நன்னூல் is now in use among the Tamilians, and held in high estimation as the best classical work. It is called நன்னூலுரை, *i.e.*, an exposition of the Nannul.

முத்துக் குமார சுவாமி யோதுவார், who studied with Saminada Tambiran, died in Tinnevelly in 1809. His chief disciple அம்பலவாணக் கவிராயர், is still living in the same place, with whom, among others, திருப்பாற்கடல் நாதன் கவிராசர், studied, who has since 14 years been a most valuable assistant to me.

Palamcottah, October 1834. C. T. E. RHENIUS